பக்கங்கள்: பதினாறு + A, B, C, D + vi

# உதயன்

விலை ரூபா 20.00

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 20 ஞாயிற்றுக்கிழமை (03.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 128

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை உலகுக்கு பகிரங்கப்படுத்தப்படும்

## பான் கீ மூனிடம் சமர்ப்பித்த பின்னர் மாத நடுப்பகுதியில் வெளியாகும்

கொழும்பு, ஏப்ரல் 03

இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் கள் மற்றும் அனைத்துலகச் சட்ட மீறல்களுக்குப் பொறுப்புச் சொல்வதற்கான ஆலோசனைகளை வழங்கவென ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இந்த மாதத்தின் நடுப்பகுதியில் பகிரங்க அறிக்கையாக வெளியிடப்பட உள்ளது. அறிக்கையின் பிரதி பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அது பகிரங்கப்படுத்தப்படும் என்று தெரிகிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)



குதூகலத்தில் இந்திய அணி

### இலங்கையை வீழ்த்தி கிண்ணம் வென்றது இந்தியா

## குடாநாட்டில் வெடிகொளுத்தி ஆரவாரம் கொழும்பில் நேற்று மயான அமைதி

கொழும்பு, ஏப்.3

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற இறுதி யாட்டக் காட்சிகளை கோல்பேஸ் மைதானத்தில் சுமார் ஒன்றரை லட்சம் பேர் கண்டு களித்தனர். எனினும் இலங்கை அணி தோல்வி அடைந்ததும் ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி, மூச்சுப் பேச்சின்றி அவர்கள் கலைந்து சென்றனர்.

கோல்பேஸ் மைதானத்தில் பொருத்தப்பட்டிருந்த இரண்டு பெரும் திரைகளில் இந்தக் காட்சிகளை மக்கள் கண்டு களித்தனர்.

இந்த ஆட்டத்தில் இலங்கை தோல்வியடைந்ததையடுத்து மக்கள் ஆரவாரமின்றி அமைதியாகக் கலைந்து சென்றனர். கொழும்பில் வெடி கொளுத்தி ஆரவாரங்கள் ஏதும் இன்றி அமைதியாக மக்கள் வீடுகளுக்குள் தங்கியிருந்தனர்.

இதேவேளை, இந்திய அணி வெற்றி பெற்றதை அடுத்து யாழ். நகரில் இந்திய அணி ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி வெற்றியைக் கொண்டாடினர். ஆரம்பத்தில் இலங்கை அணி ஆதரவாளர்கள் வெடிகொளுத்தி ஆரவாரப்பட்டனர். எனினும் இறுதியில் அமைதியாகி விட்டனர்.

இந்திய அணி ஆதரவாளர்கள் தொடர்ச்சியாக வெடி கொளுத்தி தமது மகிழ்ச்சியை இரவு 12 மணி வரை வெளிப்படுத்தினர்.

(உ-ஐ)

## வாசகர் கவனத்துக்கு

நேற்றுமுன்தினம் நள்ளிரவுக்குப் பின்னர் திடீரென உண்டான பெரும் அச்சு இயந்திரக் கோளாறு காரணமாக மாற்று ஏற்பாடுகளைச் செய்து நேற்றைய (02.04.2011) உதயனை வெளியிடுவதில் மிகப் பெரும் காலதாமதம் ஏற்பட்டது என்பதனையும்-

அதன் பொருட்டு பக்கங்களின் எண்ணிக்கையை குறைக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம் என்பதனையும் - மிகுந்த வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

அச்சு இயந்திரக் கோளாறு ஏற்பட்ட இடத்து ஆபத்பாந்தவர்களாக பத்திரிகையை அச்சிட்டு வழங்கிய நிறுவனத் தினருக்கும் அகால நேரத்தில் சிரமம் பாராது அப்பணியில் ஈடுபட்டோருக்கும்-

என்றும் போல் உங்கள் அபிமானப் பத்திரிகைக்கு நேற்றும் மனங்கோணாது ஆதரவளித்த உங்களுக்கும் எமது இதயபூர்வ நன்றிகள்.

நிர்வாகத்தினர்.

## தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா கிரிக்கெட் ராஜதந்திரத்தை பயன்படுத்தாதது ஏன்?

### இது என்ன இராஜதந்திரம் எனக் கேட்கிறது சிவசேனா

புதுடில்லி, ஏப். 03

உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதி ஆட்டத்தைப் பார்வையிட வருமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு அனுப்பி, அதன் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இந்திய அரசும் பிரதமர் மன்மோகன்சிங்கும் முயற்சி செய்யாதது ஏன்? என்று கேள்வி எழுப்பி உள்ளார் சிவசேனாக் கட்சியின் தலைவர் பால் தாக்கரே.

மும்பையில் நேற்று நடைபெற்ற உலகக்கிண்ணத் துடுப்பாட்டப் போட்டியைக் காண ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அதிகாரபூர்வ அழைப்பு விடுக்க

(15 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதிக்கு எதிராக மும்பையில் பேரணி

மும்பை, ஏப். 03

உலகக் கிண்ண துடுப்பாட்டத்தின் இறுதிஆட்டத்தைக் காண மும்பை சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் மத்திய மும்பையில் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

மத்திய மும்பையில் தமிழர்கள் அதிகம் வாழும் தாராவி பகுதியில் இந்தப்

(15 ஆம் பக்கம் பார்க்க)

எந்தவொரு சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சியறைகளிலும் நீங்கள் கொள்வனவு செய்யும் கைனடிக் சப்பாரி (Kinetic Safari) மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7000 பெறுமதியான DVD பிளேயர் இலவசம்.



இன்றே விரையுங்கள்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். | ஆலடிச் சந்தி, மானிப்பாய். | பருத்தித்துறை வீதி, நெல்லியடி. | கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 021 222 5408 | 021 222 4389 | 021 224 0555 | 021 225 5343 | 021 226 4937 | 077 9508957 |

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.




# பத்தாவது உலகக் கிண்ணம் இந்தியாவின் கைகளில்



- டிலீப் -

இந்திய அணித்தலைவர் டோனி மற்றும் கௌதம் கம்பீர் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணியை ஆறு விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றி கொண்டது. இதன் மூலம் இரண்டாவது தடவையாக உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய முதல் ஆசிய அணி என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டது. 1983 ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றி 28 ஆண்டுகளின் பின்னர் தனது சொந்த மண்ணில் கிண்ணத்தை வென்றது. இலங்கை அணி இறுதிவரை போராடிய போதும் அந்த அணியின் களத் தடுப்பு பலவீனம் காரணமாக தோல்வியைத் தழுவ நேரிட்டது.





பத்தாவது உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டம் மும்பையில் நேற்று இடம் பெற்றது. இதில் முதல் முறையாக இரு ஆசிய அணிகள் இறுதி ஆட்டத்தில் மோதிக் கொண்டன. இலங்கை அணியும் இந்திய அணியும் இறுதி ஆட்டத்துக்கு தமது அணிகளில் மாற்றம் செய்திருந்தன. இலங்கை அணியில் காயம் காரணமாக மத்தியூஸ் விலக்கப்பட்டு அவரது இடத்துக்கு திஸ்ஸர பெரேரா உள்வாங்கப்பட்டிருந்தார். மற் றும் சாமர சில்வா, ஹேரத், மெண்டிஸ் ஆகியோர் நீக்கப்பட்டு கப்புக் கெதர, சுராஜ் ரண்டீவ், குலசேகரா ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டிருந்தனர். இந்திய அணி யில் காயம் காரணமாக நெஹ்ரா விலக்கப்பட்டு சிறீசாந் அணியில் இணைக்கப்பட்டார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி களமிறங்கிய தரங்க-டில்ஷான் ஜோடி மந்தமான ஆட்டத்தையே ஆடியது. சகீர்கானின் சிறப்பான பந்து வீச்சின் முன்னால் இலங்கை அணியின் ஆட்டம் ஆரம்பத்தில் அடங்கியது. தரங்க இரண்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து இலங்கை அணியின் ஆட்டம் பாதாளத்தை நோக்கி சென்றது. சங்கக்கார - டில்ஷான் ஜோடி மிக நிதானமாக ஆடிய போதும் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளியில் சரிந்த வண்ணமேயிருந்தன. அத்துடன் இந்திய அணியின் களத் தடுப்பை உடைத்து இலங்கை அணியினால் ஓட்டங்களைப் பெறமுடியாமல் போனது.

இதனால் இலங்கை அணி தொடர்ச்சியாக நிதான ஆட்டத்தையே வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. இருந்தும் மஹேல ஜெயவர்த்தன சிறப்பாக துடுப்பெடுத்தாடி அணியின் சரிவை ஈடுசெய்து கொண்டிருந்தார். இவரது சிறப்பான ஆட்டம் இந்திய அணியின் பந்து வீச்சை பதம்பார்த்தது. மறுமுனையில் விக்கெட் சரிவு இருந்தாலும் ஒரு கட்டத்தில் இலங்கை அணி அதிரடியாய் மாற்றம் செய்து திஸ்ஸர பெரேரா இருக்கத்தக்கதாக குலசேகரவை களமிறக்கியது. இவர் அணியின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்தார். இறுதி ஐந்து ஓவர்களும் ‘பட்டிங் பவர்பிளே’ எடுக்கப்பட்டது. இதில் இலங்கை அணி தமது முழுப் பலத்தையும் திரட்டி சிறப்பாகவும் அதிரடியாகவும் ஆடியது. மஹேல சிறப்பான ஆட்டத்தின் மூலம் 84 பந்துகளில் சதம் கடந்தார். மறு முனையில் குலசேகரா 30 பந்துகளில் 32 ஓட் டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார். குலசேகராவின் ஆட்டமிழப்பை தொடர்ந்து களமிறங்கிய பெரேரா அதிரடியாய் ஓட்டங்களைக் குவித்தார். ஆரம்பத்தில் சிறப்பாக பந்து வீசிய சகீர்ரின் பந்து வீச்சுக்கு ‘பவர் பிளேயில்’ அதிகளவு ஓட்டங்கள் குவிக்கப்பட்டன. இறுதியில் இலங்கை அணி 274 ஓட்டங்களை 6 விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக் கொண்டது.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணிக்கு ஆரம்பத்திலேயே இலங்கை அணி அதிர்ச்சி யளித்தது. எந்த வித ஓட்டங்களையும் பெறாத நிலை யில் முதலாவது ஓவரின் இரண்டாவது பந்திலேயே அதிரடி வீரர் சேவாக் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து சச்சினும் 18 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்து வீச்சில் வெளியேற்றப்பட்டார். இதனைத் தொடர்ந்து இந்திய அணி ஆட்டம் காணத் தொடங்கியது. இருந்தும் ஹோக்லி, கம்பீர் இருவரும் நிதானமாகவும் ஆட்டத்தின் போக்கிற்கு ஏற்பவும் ஓட்டங்களைக் குவித்தனர். மிகச் சிறந்த இணைப் பாட்டத்தை இருவரும் இந்திய அணிக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர்.

இவர்களது இணைப்பாட்டத்தின் உதவியுடன் இந்திய அணி வலுவான நிலையை அடைந்தது. டில்ஷானின் பந்து வீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஹோக்லி வெளியேறினார். தொடர்ந்து அணித்தலைவர் டோனி களமிறங்கினார். டோனி - கம்பீர் ஜோடி இந்திய அணியின் வெற்றியை உறுதி செய்தது. இவர்களின் சிறப்பான ஆட்டத்தை இலங்கை பந்து வீச்சாளர்களால் பிரிக்க முடியாமல் போய்விட்டது. கம்பீரின் ஆட்டமிழப்புக்கான சந்தர்ப்பங்கள் பலதினை இலங்கை அணி தவறவிட்டது. மேலும் களத்தடுப்பில் இலங்கை தொடர்ச்சியாக சொதப்பியே வந்தது. இதனை சரிவரப் பயன்படுத்திக்கொண்ட இந்திய அணி மிக இலகுவாக ஓட்ட இலக்கை விரட்டியது. சிறப்பாக ஆடிய கௌதம் கம்பீர் அரைச்சதம் கடந்து அசத்தினார். இருந்தும் அணி வெற்றியை நெருங்குகையில் 97 ஓட்டங்களுடன் கம்பீர் ஆட்டமிழந்தார். பெரேராவின் பந்து வீச்சில் போல்டாகி வெளியேறினார். இருந்தும் டோனி-யுவாராஜ் ஆகியோரின் அபாரமான இறுதிக் கட்டத் தாக்குதல் வெற்றியளிக்க இந்திய அணிக்கு வெற்றி வந்து சேர்ந்தது.

சாதிக்க வேண்டிய சாதனை நாயகன் முரளி சோகத்துடன் தனது கிரிக்கெட் வாழ்க்கையை முடித்தார். சச்சின் உற்சாகமாய் பவனி வந்தார். இறுதி ஆட்டத்தில் இந்திய அணிக்கு கிண்ணம் வெல்ல காரணமாயிருந்த டோனி ஆட்ட நாயகனாக தெரிவானார். தொடர் முழுவதும் துடுப்பாட்டம், பந்து வீச்சில் கலக்கிய யுவராஜ் தொடர் நாயகன் விருதை தட்டிச் சென்றார்.



## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதி ஆட்டம்

ஆட்டம் : இலங்கை Vs இந்தியா | நாணயச் சுழற்சி: இலங்கை

முடிவு : 06 விக்கெட்டுக்களால் இந்தியா வெற்றி | ஆட்டநாயகன் : டோனி

**இலங்கை**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| தரங்க | c சேவாக் b சகீர்கான் | 02 | 20 | 0 | 0 |
| டில்ஷான் | b ஹர்பஜன்சிங் | 33 | 49 | 3 | 0 |
| சங்கக்கார | c டோனி b யுவராஜ்சிங் | 48 | 67 | 5 | 0 |
| ஜெயவர்த்தன | ஆட்டமிழப்பில்லை | 103 | 88 | 13 | 0 |
| சமரவீர | lbw b யுவராஜ்சிங் | 21 | 34 | 2 | 0 |
| கப்புக்கெதர | c ரெய்னா b சகீர்கான் | 01 | 05 | 0 | 0 |
| குலசேகரா | run out(டோனி) | 32 | 30 | 1 | 1 |
| பெரேரா | ஆட்டமிழப்பில்லை | 22 | 09 | 3 | 1 |
| மலிங்க | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரன்டீவ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முரளிதரன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb 3,w 6, nb 2, b 1) | 12 | | | |

| பெயர் | O | R | W | M | TOTAL - 274/6 (50) |
|---|---|---|---|---|---|
| சகீர்கான் | 10 | 60 | 2 | 3 | 1-17 (தரங்க), 2-60 (டில்ஷான்), |
| சிறீசாந் | 08 | 52 | 0 | 0 | 3-122 (சங்கக்கார), |
| முனாப்பட்டேல் | 09 | 41 | 0 | 0 | |
| ஹர்பஜன்சிங் | 10 | 50 | 1 | 0 | 4-179 (சமரவீர), |
| யுவராஜ்சிங் | 10 | 49 | 2 | 0 | 5-182 (கப்புக்கெதர), |
| சச்சின் | 02 | 12 | 0 | 0 | 6-248 (குலசேகர), |
| ஹோக்லி | 01 | 06 | 0 | 0 | |

**இந்தியா**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சேவாக் | lbw b மலிங்க | 00 | 02 | 0 | 0 |
| டெண்டுல்கார் | c சங்கக்கார b மலிங்க | 18 | 14 | 2 | 0 |
| கம்பீர் | b திஸ்ஸர பெரேரா | 97 | 122 | 9 | 0 |
| ஹோக்லி | c & b டில்ஷான் | 35 | 49 | 4 | 0 |
| டோனி | ஆட்டமிழப்பில்லை | 91 | 79 | 8 | 2 |
| யுவராஜ்சிங் | ஆட்டமிழப்பில்லை | 21 | 24 | 2 | 0 |
| ரெய்னா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹர்பஜன்சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சகீர்கான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சிறீசாந்த் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முனாப்பட்டேல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 8, b 1, lb 6 ) | 15 | | | |

| பெயர் | O | R | W | M | TOTAL - 277/4(48.2) |
|---|---|---|---|---|---|
| மலிங்க | 09 | 42 | 2 | 0 | 1-0 (சேவாக்), |
| குலசேகர | 8.2 | 64 | 0 | 0 | 2-31 (டெண்டுல்கார்), |
| திஸ்ஸர பெரேரா | 9 | 55 | 1 | 0 | |
| ரன்டீவ் | 9 | 43 | 0 | 0 | 3-114 (ஹோக்லி), |
| டில்ஷான் | 5 | 27 | 1 | 0 | 4-223 (கம்பீர்), |
| முரளிதரன் | 8 | 39 | 0 | 0 | |

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

# அமைச்சர்களான டலஸ், பவித்ரா வசமிருந்த இரண்டு நிறுவனங்கள் ஜனாதிபதியின் கீழ்

கொழும்பு, ஏப்.03

இளைஞர் விவகாரம் மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனமொன்றும் , தொழில் நுட்பம் மற்றும் ஆய்வுகள் அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனமொன்றும் ஜானாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அவரது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கமைய அமைச்சர் டலஸ் அழகப் பெருமவின் நிர்வாகத்தின் கீழ் அமைந்திருந்த வரையறுக்கப்பட்ட ''இன்கிநீன் இன்ஸ்சிரீயூட் ஒவ் பிறிண்டிங் அண்ட் கிராபிக்ஸ் ஸ்ரீலங்கா'' நிறுவனம் ஜானாதிபதியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கீழ் இருந்த கொள்கைகள் ஆய்வு நிறுவனம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

மார்ச் 17 ஆம் திகதிய 1697/25 இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலமாகவே மேற்படி நிறுவனங்கள் ஜனாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதோடு கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் மேற்படி வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைக்கு வருகிறது.

இதற்கு மேலதிகமாக மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் மூலமாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழுள்ள இலங்கை தேயிலை சபை நீக்கப்பட்டு அது, தோட்டப் பயிர் செய்கை அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் கீழிருந்த மோட்டார் வாகனப் பதிவுகள் மற்றும் அனுமதிப்பத் திரங்களை வழங்குதல் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்துக் கண்காணிப்பு ஆகிய துறைகள் போக்குவரத்து அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (த-22)

# மிக மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் 8வயதுச் சிறுவன் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஏப்.03

மாமனால் மோசமாகத் தாக்கப்பட்ட எட்டு வயது பாடசாலை மாணவனை பொலிஸார் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

தடியினால் தாக்கப்பட்ட தழும்புகளுடனும் முகத்தில் ஏற்பட்ட காயத்துடன் முகம் வீங்கி இரத்தம் சிந்திய நிலையிலும் பாடசாலைக்கு வந்த இந்த மாணவனை வித்தியாலய உயர் வகுப்பு மாணவர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கையளித்தனர். விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் பொலிஸார் இந்த மாணவனை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை மட்டுவில் வைரவர் கோயிலடியில் இடம்பெற்றது. இதே இடத்தை சேர்ந்த மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி கற்கும் மாணவனான திருச்செல்வம் மதுவன் (வயது-8) என்பவரே வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலைக்கு புறப்படுவதற்கு முன்னர் வீதியில் பறிக்கப்பட்டிருந்த வைக்கோலை வளவுக்குள் எடுத்துச்செல்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே மாமா தன்னை தாக்கியதாக மாணவன் தெரிவித்தார்.

# விபத்துக்களில் காயமடைந்த 6 பேர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,ஏப்.3

பல பகுதிகளில் இருந்து வாகன விபத்துக்களில் சிக்கிய 4பேரும், குடும்பத் தகராறு காரணமாக காயமடைந்த 2 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கன்னாதிட்டி வீதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த நல்லூர் சிவன் கோயிலடியைச் சேர்ந்த ஜே.சாந்தமலர் (வயது42) தலையில் படுகாயமடைந்த நிலையிலும் காரைநகரில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுக்கு இடம்கொடுக்க முற்பட்ட வேளை கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மதிலுடன் மோதுண்டவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ.அருள்ராஜ் (வயது 21) என்பவர் காயமடைந்த நிலையிலும் யாழ். போதனா வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பரந்தனுக்கும் பளைக்கும் இடையே இரு வாகனங்கள் நேருக்கு நேர்மோதுண்ட விபத்தில் குருநகரைச் சேர்ந்த தே. பிறிற்னோ என்பவர் (வயது-34) காயமடைந்த நிலையிலும், பண்டத்தரிப்பு மோட்டார் சைக்கிள்- தனியார் பஸ் விபத்தில் மோட்டார் சைக் கிளில் சென்றவரான செ.ரவிக் குமார் (வயது 42) காய மடைந்த நிலையிலும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

யாழ்.கொட்டடிப் பகுதியில் குடும்பத்தகராறு காரணமாக படு காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த மு.யோகநாதன் (வயது 61) கச்சேரி நல்லூர் வீதியில் தகராறு காரணமாக பீங்கானால் தலையில் தாக்கப்பட்டு காயமடைந்த எஸ்.செந்தூரன் (வயது 22) ஆகியோர் யாழ்.போதனா வைத்தியா சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-4)

# திருடர்களின் கத்திவெட்டுக்கு குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, ஏப்.3

திருடர்களின் கத்தி வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை பளை, தம்பகாமத்தில் இடம்பெற்றது.

நள்ளிரவு வேளையில் படையினர் அழைப்பது போல் அழைத்து வீட்டில் உள்ள அனைவரும் வெளியே வருமாறு கூறியதையடுத்து நித்திரையிலிருந்த அனைவரும் வெளியே வந்தனர்.

அங்கு கத்திகள், கொட்டன்களுடன் நின்றவர்கள் பெண்கள் அணிந்திருந்த தங்க நகைகளை திருட முற்பட்டனர்.

வந்து நின்றவர்களை இனங்கண்ட வீட்டுக்காரர் அதனைத் தடுக்க முற்பட்ட வேளையில் கத்தியால் தலையில் வெட்டிக் காயப்படுத்தினர்.

தலையிலும் கையிலும் பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பளை தம்பகாமதைச் சேர்ந்த சுப்பிரமணியம் கரன் (வயது 31) என்பவரே காயமடைந்தவராவார்.

# இலங்கை அணிக்கு ஆசி வேண்டி நல்லூரில் படையினர் வழிபாடு



யாழ்ப்பாணம், ஏப்.3

உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெற வேண்டும் என ஆசி வேண்டி நல்லூர் கந்த சுவாமி கோயிலில் நேற்று முற்பகல் 10 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் ஏற்பாட்டில் அவரது தலைமையில் இந்தப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் படை அதிகாரிகள், படையினர் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, குடாநாட்டில் உள்ள விகாரைகள் மற்றும் இந்து ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ஐ-14)

# பிரதான அரச வைத்தியசாலைகளில் பணம் செலுத்தும் விடுதி விரைவில்

கொழும்பு, ஏப்.03

நாடு முழுவதும் பிரதான வைத்தியசாலைகளில் பணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதிகளை நிறுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் இரு மாதகாலத்துக்குள் அம்பாறை மத்திய வைத்தியசாலையில் பணம் செலுத்தும் விடுதிகளை நிறுவுவது குறித்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்டிருந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தனியார் வைத்தியசாலைகளை விட அரச வைத்தியசாலைகளில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதால் அரச வைத்தியசாலைகளிலும் பணம் செலுத்தும் விடுதிகள் அமைவதன் அவசியம் பற்றி பல்வேறு தரப்புகளால் நீண்டகாலமாகவே யோசனைகள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்த ஆண்டின் இறுதியில் மாவட்டங்களில் உள்ள பிரதான வைத்தியசாலைகளில் பணம் செலுத்தும் விடுதிகள் நிறுவப்பட உள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலை,கண் சிகிச்சை வைத்தியசாலை, காஸல் வைத்தியசாலை போன்ற பிரதான வைத்தியசாலைகள் சிலவற்றில் பணம் செலுத்தும் விடுதிகள் நடைமுறையில் உள்ளன. (த-22)

# வலி.மேற்கில் அடிக்கடி மின்தடை

யாழ்ப்பாணம், ஏப்.3

வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

சண்டிலிப்பாய், மானிப்பாய், இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் இவ்வாறு அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தவணைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுவிடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# ஆடியபாதம் வீதியில் வாகனங்கள் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்

யாழ்ப்பாணம், ஏப்.3

திருநெல்வேலிச் சந்தைக்கு முன்பாக ஆடியபாதம் வீதியில் சைக்கிள்கள் நிறுத்தப்படுவதால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் சைக்கிள்களும் வாகனங்களும் காலை வேளையில் அதிகளவில் நிறுத்தப்படுகின்றன.

இதனால் சந்தைக்கு வரும் மக்களும் வீதியில் பயணம் செய்யும் வாகனங்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தைக்கு முன்னால் உள்ள சைக்கிள் தரிப்பிடம் போதிய இடவசதி இல்லாமல் காணப்படுவதாலேயே சந்தைக்கு வருவோர் தமது சைக்கிள்கள் மற்றும் வாகனங்களை இந்த வீதியில் நிறுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-26)

# மூன்று சாரதிகளுக்கு அபராதம்

நெல்லியடி, ஏப்.3

நெல்லியடி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட வீதிக் கண்காணிப்பில் வாகனங்களை எச்சரிக்கை இன்றித் செலுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் மாவட்ட நீதிபதி முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். வழக்கினை விசாரித்த மாவட்ட நீதிபதி இவர்கள் மூவருக்கும் தலா 1000 ரூபா அபராதம் விதித்தார். (ஐ-319)

# ஐந்து சாலைகளுக்கு புதிய பஸ்கள் கொள்வனவு செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.03

வடபிராந்தியத்திலுள்ள போக்குவரத்துச் சபைகளுக்கு 'லீசிங்' முறை மூலமாக இவ்விரண்டு பஸ்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. எதிர்வரும் வருடப்பிறப்புக்கு முன்னதாக இந்த பஸ்கள் கொள்வனவு செய்யப்படும் என போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் க. கேதீசன் தெரிவித்தார்.

புதிதாகப் பதவியேற்ற பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, மன்னார், வவுனியா, ஆகிய பஸ் டிப்போக்களுக்கு தலா இவ்விரண்டு பஸ் வண்டிகளை 'லீசிங்' முறையில் கொள்வனவு செய்து வழங்கவுள்ளோம்.

எம்மிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு நாங்களே இச் சபைகளை வளர்க்க வேண்டும். கொள்வனவு செய்யப்படும் பஸ்கள் மூலமாக உழைத்து முன்னேற வேண்டும் இந்த நிலைதான் தற்போது காணப்படுகிறது. எம்மால் முடிந்தளவு முயற்சி செய்து மக்களுக்கு சேவையை வழங்க உள்ளோம் என மேலும் தெரிவித்தார். (ஐ-14)

## வீடு வாடகைக்கு

யாழ். புங்கங்குளம் சந்தியிலுள்ள 03 அறை, 2 வரவேற்பறை மற்றும் சமையல், குளியல் அறை, 4 வாகனங்கள் நிறுத்தத்தக்க வீடு வாடகைக்கு உண்டு.(நிறுவனங்கள் விரும்பத்தக்கது )
0779 937402

## வேலை ஆள் உடன் தேவை

நியூராஜா ஐஸ்கிறீம் (P.V.T. Ltd) ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர் (Salesmen) ஆண்கள் தேவை . தொடர்பு: 077 6722055

## காணி விற்பனைக்கு

கோப்பாய், பூதர்மடம், பருத்தித்துறை வீதி, 100 யார் தூரத்தில் சமுர்த்தி வங்கி அருகில் 27 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (காணி பிரித்துக் கொடுப்பதில்லை).
0112365164, 0770 268226

## வீடு வாடகைக்குத் தேவை

தாயும் இரண்டு பிள்ளைகளும் இருப்பதற்கு, யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்குத் தேவை. அல்லது ஒன்று, இரண்டு தனி அறையுடன் வீடு தேவை. தொடர்பு:- 0772470593

# STUDY IN UK, CANADA , USA CYPRUS, POLAND & SINGAPORE

- **UK** → தவணைக்கட்டண அடிப்படையில் பணம் செலுத்தலாம் மற்றும் IELTS இருந்தாலும் இல்லாவிட்டாலும் கல்வியை தொடரலாம்.
- **USA** → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே.
- **CANADA** → IELTS, Sponsor, வயதெல்லை ஆகியன இல்லாமல் 2வது வருடத்திலிருந்து PR கிடைக்கும்.
- **POLAND** → கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.
- **SINGAPORE** → பதிவுக்கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும். கல்லூரி அனுமதி உத்தரவாதம்.
- **CYPRUS** → கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.

100% Legal & Genuine process

**Next Intake: May.'11**



For further Info: E-mail: read.int@gmail.com
Fazna:0778438403, Madu:0774848888, Rifky :0779898931

**READ International**
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

## தேவை

கொழும்பில் பணிபுரியும் தமிழ் குடும்பத்துக்கு வீட்டில் தங்கி வேலை செய்யக்கூடிய பெண் தேவை. தங்குமிடம், சாப்பாட்டு வசதியுண்டு. சம்பளம் 8000/= - 10000/=.
தொடர்பு: 0773819855, 0773456779

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதியில் 7 பரப்பளவுள்ள காணி விற்பனைக்குண்டு. (கோண்டாவில் சந்தியிலிருந்து 100 மீற்றரில் காணி உண்டு).
தொடர்புகளுக்கு: 0779259334.

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 06.04.2011 விநியோகிக்கப்படும்.

★ ராஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை
★ P. ரவி நபார்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ ஜென்சி பாம் முதலாம் கட்டை, பருத்தித்துறை.

T.P: 021 222 2867
077 6090 926
(39-23-25)

## வீடு விற்பனைக்கு


கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலைக்கு அருகில் 2 ½ பரப்புக் காணியில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் புதிதாகக் கட்டப்பட்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0715397117

## குடிக்கும் நீர் சுத்தம் இல்லாவிட்டால் உங்களுக்குப் பிரச்சினையா?

- நீங்கள் குடிக்கும் நீர் சேறு, சகதி, உப்புத்தன்மை நிறைந்ததா?
- கிருமிகள் நிறைந்து சுவை, நிறம், மணத்தில் வேறுபட்டதா?
- குளோரின் மற்றும் உடம்பிற்கு கெடுதல் விளைவிக்கும் கிருமிகள் சேர்ந்ததா?
- உங்களுக்கு மேல் கூறப்பட்ட விடயங்கள் பிரச்சினையா?

- U.V Filter — கிருமிகளை அகற்றல்
- Sediment Filter — சேறு, சகதி அகற்றல்
- Carbon Filter — குளோரின் அகற்றல்
- Softner Filter — கல்சியப்படிவு அகற்றல்
- R.O System — உப்புத் தன்மை அகற்றல்

So~Safe




வோடர்கெயார் இன்ஜினியரிங் (தனியார்)நிறுவனம்
WATER CARE
78F, கண்டி வீதி, தறுகம, களனிய
தொலைபேசி:0112 911 499, 0114 811 822, 0115 869 968 தொலைநகல்:0114 811 823 அவசர தொடர்புகளுக்கு: 0712 718 518
இலத்திரனியல் அஞ்சல்:watercare@sltnet.lk இணையம்:www.watercare.lk

## லட்சார்ச்சனை

சுழிபுரம், ஏப்.3

சுழிபுரம்பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய லட்சார்ச்சனை நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை அபிஷேக ஆராதனைகள், நண்பகல் நியமம், மாலை சண்முக அர்ச்சனை ஆகியன நடைபெறும்.

SHAMROCK
A/L 2013 ...
GEN.ENGLISH (2013)
M.KINGSTAN. B.A (MADRAS)
O/L-REPEAT

## மரண அறிவித்தல்

# கதிரவேலு கோபாலபிள்ளை

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)



மதவாச்சியைப் பிறப்பிடமாகவும் திகிரி, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கோபாலபிள்ளை வெள்ளிக்கிழமை (01.04.2011) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் கதிரவேலு - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் கதிரவேலு - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் சிங்கராசா (லண்டன்), கருணைராசா (டென்மார்க்), சாந்தகுமாரி (டென்மார்க்), சிவராசா (சுவிஸ்), வசந்தகுமாரி (ஜேர்மனி), ஆனந்தி (பிரான்ஸ்), செந்தில்ராசா (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், இராதா (இந்தியா), கோமதி (டென்மார்க்), கலைச்செல்வி (சுவிஸ்), சுரேஸ்குமார் (டென்மார்க்), விஜயரட்ணம் (ஜேர்மனி), உதயகுமார் (பிரான்ஸ்), வளர்மதி ஆகியோரின் அன்பு மாமனும் கோபிநாத், சாமந்தி, சியாமளா, ஆரபி, துவாரகன், உசாய், தனுசியா, தாரண்ணியா, வினிதா, விதுலன், உமயவன், ஆரண்யா, ஷர்மினி, ஹம்சாயினி, சர்வஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


திகிரி,
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை. (108643) (44-)

தகவல்:
மகன்- கோ.செந்தில்ராசா
மருமகள் - செ.வளர்மதி.

## O/L தேர்வின் பின்னர் தற்போது Computer Science Degree இலங்கையில்

# Bachelor of Computer Science (HONS)

University of New Brunswick (Canada), Delivered in Sri Lanka — UNB




IDM City Campus # 3

IDM City Campus #3
#16, 42nd Lane, Colombo 06, Sri Lanka
Tel : +94 11 2 361 801 Fax : +94 11 2 361 807
www.idmcc3.lk | info@idmcc3.lk

## - தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

20

**APRIL. 2011 TO SEPT.2011**

*தமிழ் மொழி மூலம்*

- Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
- Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
- Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Montessori - மொன்டிசூரி டிப்ளோமா

### கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

● கல்முனை ● மட்டக்களப்பு ● திருகோணமலை ● புத்தளம் ● வவுனியா ● மன்னார் ● யாழ்ப்பாணம் ● கண்டி ● கொழும்பு ● ஹட்டன் ● அனுராதபுரம் ● நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: **0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2011

# சனசமூக நிலையங்களின் சமாசம் அமைப்பு

வரணி, ஏப்.3

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி உப அலுவலகப் பிரிவினுள் இயங் கும் சனசமூக நிலையங்கள் சார்பில் சமாசம் ஒன்று கடந்தவாரம் அமைக் கப்பட்டுள்ளது.

வரணி உப அலு வலகப் பொறுப்ப திகாரி எஸ்.பத்ம நாதன் தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சாவகச்சேரி பிர தேச சபைச் செய லாளர் செல்வி ரீ.தர்ஷினி மற்றும் சாவ கச்சேரி பிரதேச சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு மதி ஜே.செல் வராணி ஆகியோர் அதிதி களாகக் கலந்துகொண்டனர்.

சமாச நிர்வாகிகள் விவரம் வருமாறு:-

த லை வ ர் - ஆ.சாந்தகுமார், உப தலைவர்- கி.தங்கேஸ்வரன், செ ய ல ா ள ர் - இ.சுதாகரன், உப செயலாளர்- சி. அரு ணாசலம், பொரு ளாளர்- வே.இரத் தினசிங் கம். நிர் வாகசபை உறுப் பினர்களாக ச.பால சுந்தரம், க.இரா சையா, சி.தியா கேஸ், க.இராசரத் தினம் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். (ம-122)

## கேள்வி கோரல்

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ESDP நிதியீட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நூலக அமைப்பு வேலைக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| இல. | பாடசாலை | வேலை | ஒப்பந்ததாரரின் தகைமை | மீளளிக்கப்படும் வைப்பு |
|---|---|---|---|---|
| 01 | கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி | நூலகம் அமைத்தல் | C 9 | 26,500.00 |

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் பதிவுள்ள C 9 தரத்தினையும், அதற்கு மேற்பட்ட தரத்தினையும் கொண்ட ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பிக்க முடியும்.
02. கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை வேலைநாள்களில் வலயக் கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு பார்வையிடமுடியும்.
03. கேள்விப்பத்திரங்களை 04.04.2011 தொடக்கம் 08.04.2011ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை வேலை நாள்களில் கணக்குக் கிளையில் மீளளிக் கப்படும் வைப்பினையும், கேள்விப்பத்திரத்தினைப் பெறுவதற்கான 1000.00 ரூபா பணத்தினையும் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன், பாடசாலை வேலைகள் கிளையில் தொடர்புகொண்டு கேள்விப் பத்தி ரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
04. பூரணப்படுத்திய கேள்விப்பத்திரங்களை 11.04.2011 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னதாக மூலப்பிரதி, இணைப்பிரதி என்பவற்றினைத் தனித்தனி தபாலுறைகளிலிட்டு மூடிச் சீலிட்டு வலயக் கல்விப்பணிப் பாளர், கிளிநொச்சி என முகவரியிட்டு பாடசாலை வேலைகள் கிளையி லுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
05. கேள்விப்பத்திரங்கள் 11.04.2011 மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள் ளப்பட்டு அன்றைய தினம் மு.ப. 11.00 மணியளவில் வலயக் கல்வி அலு வலகக் கேள்விச் சபையால் ஆய்வு செய்யப்படும். அத்தருணம் ஒப்பந்த காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ கலந்துகொள்ள முடியும்.

**த.குருகுலராஜா,**
**தலைவர், கேள்விச் சபை / வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.** (34) (C/577325)

### ஆண்டு நிறைவும் பரிசளிப்பும்

வரணி, ஏப்.3

இணுவில்பொது நூலகத்தினதும், சனசமூக நிலை யத்தினதும் ஒன் பதாம் ஆண்டு நிறைவு விழா மற்றும் பரிசில் வழங்கல் வைப வமும் இடம்பெற வுள்ளன.

இந்த நிகழ்வு இணுவில் பொது நூலக கலாசார மண் டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு சொ. ஹரிசங்கர் தலைமையில்இடம் பெறவுள்ளது.

நிகழ்வின் பிர தம விருந்தினராக யாழ்ப்பாணம் பிராந் திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் திருமதி மது மதி வசந்தகுமார், சிறப்பு விருந்தினர் களாகசட்டத்தரணி செல்வி ஞான லோஜினி சிவலிங் கம், மானிப்பாய் மகளிர்கல்லூரி உப அதிபர் வி.கலை நேசன் ஆகியோர் கலந்து கொள்கின் றனர். (ஐ-323)

### தங்கச் சங்கிலியை அடையாளம் காட்ட அறிவுறுத்து

உரிமை கோரப் படாத தங்கச்சங் கிலியொன்று யாழ். பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஒப் படைக்கப்பட்டுள் ளது.

எதிர்வரும் ஆறு மாதத்திற்குள் உரி யவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் அது அரசுடமை யாக்கப்படுமென் றும் யாழ். நீதிமன் றப் பதிவாளர் அறி வித்துள்ளார். (ம-9)

## மனமார வாழ்த்துகின்றோம்



இலங்கை வங்கிச் சேவையில் 38 வருடங்கள் தன்னை முழுமையாக அர்ப் பணித்துப் பல சாதனைகள் படைத்து இறுதியாக சுன்னாகம் இலங்கை வங்கி, மேற்தரக்கிளையின் முகாமையாளராக திறம்படச் செயற்பட்டு வாடிக்கையாளர் கள், பாமரமக்கள், வங்கி உத்தியோகத்தர்கள், நண்பர்கள் யாவரதும் நன் மதிப்பைப் பெற்று ஓய்வு பெற்றுச்செல்லும்

### உயர்திரு. S.B.அரசகுமார்

அவர்கள், அவரது ஓய்வுக்காலத்தில் அவரது குடும்பத்தாருடன் சுகதேகியாக நீடூழி வாழ்ந்து பொதுப் பணியாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல இறைசக்தியை வேண்டுவதுடன் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின் றோம்.

SUNDHARSON
Jaffna Road, Manipay

(29)

வாழ்த்துபவர்கள்:
உரிமையாளர்கள்,
பணியாளர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.நாகலிங்கம் தனேந்திரன்

வளம் பல கொழிக்கும் யாழ்.மண்ணின் கொட்டடி சீனிவாசகம் வீதியில் பிறந்து, கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திலும், வைத்தீஸ்வரா வித்தியால யத்திலும் உயர்தரக் கல்வியை முடித்து, அதன் பின் சமூகப் பணியில் இணைந்து தன்னூருக்கு மட்டுமன்றி பல ஊருக்கும் பல சேவைகள் புரிந்து வந்தவேளை காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில் தனது கன்னித்தொழிலை தொடங்கி பின்பு புடைவை விற்பனை, திருமணப் பொருத் தம், காணி, வாகன விற்பனையிலும் ஈடுபட்டுப் பின் சமாதான நீதிவான் என்னும் கௌரவப்பட்டம் பெற்றுப் பின் னர் மனித உரிமைகள் அமைப்பில் இணைந்து சேவையாற் றியமையைக் கருத்திற்கொண்டு உன்னத சேவையாளர் எனக்கருதி உத்தம விருதாம் கலாநிதிப் பட்டம் பெற்றமை யையிட்டு அவரை மனம் திறந்து வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டம், பதவி பெற்று மக்களுக்குச் சேவையாற்ற எல்லாம் வல்ல காளியம்மனை வணங்கி வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
P.ஜெயபாலன் குடும்பம்
M.கிருஸ்ணகுமார் குடும்பம் (சுதா) } இத்தாலி.
P.சிவபாலன் குடும்பம்
P.கீர்த்தன் குடும்பம் } நோர்வே.
P.குணபாலன் குடும்பம் (லண்டன்)

(49,19,26)

## ஜயோதர

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 738 திகதி 31-03-2011

வெற்றி எண்கள்

**01 15 36 41 K**

ஜக்பொட் பரிசு ரூ. 14,342,560/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,342,560/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 2,000/= | 28,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 417 | 1,000/= | 417,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 677 | 1,000/= | 677,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 17093 | 60/= | 1,025,580/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8102 | 40/= | 324,080/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 200267 | 20/= | 4,005,340/= |
| | | மொத்தம் ரூ. 7,277,000/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 700931645-8-08 |
| வவுனியா | 700927725-0-20 |
| பதுளை | 700923703-6-26 |
| கண்டி | 700938321-8-48 |
| குருநாகல் | 700921043-0-00 |
| கொழும்பு | 700937220-8-28 |
| புத்தளம் | 700926851-7-17 |
| மாத்தளை | 700931435-3-33 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,677,000/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 14,887,270/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஏப்ரல் 04 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

# பெருமையுடன் வாழ்த்துகிறோம்



யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவியேற்றுள்ள முதுநிலைப் பேராசிரியர்

**வசந்தி அரசரட்ணம்**

வளம்பொருந்திய தென்மராட்சி மண்ணில் உதித்து ஆரம்ப, உயர்தரக் கல்வியை புகழ்பூத்த சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்றுத்தேர்ந்து, வேறுபட்ட இடங்களில் பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொண்டு, கலாநிதிப் பட்டத்தையும் பெற்றதுடன். இவரின் தேர்ந்த அறிவினால் 1984 இல் யாழ். பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக இணைந்து தனது வளர்ச்சிப் பாதையில் துறைத் தலைவர், இணைப் பேராசிரியர், பேராசிரியர், மருத்துவ பீடாதிபதி, முதுநிலைப் பேராசிரியர் ஆகிய பதவிகளைத் திறம்படச்செய்து 01.04.2011 அன்று யாழ். பல்கலைக்கழகத்தின் முதல் பெண் துணைவேந்தராகத் தாங்கள் பதவியேற்றதையிட்டு நாம் பேருவகை அடைவதுடன் தொடர்ந்தும் பல பட்டங்களையும் உயர் பதவிகளையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்தும் உறவுகள்:

**A.K.துரைரட்ணம் குடும்பம்,**
**T.ஸ்ரீலவன் குடும்பம், T.ஸ்ரீரங்கன் குடும்பம்,**
**S.சிவசுரதன் குடும்பம்,**
**T.ஸ்ரீசுடரோன் குடும்பம்.**

## செயற்கை அவயத்துக்கு பதியுமாறு அறிவுறுத்து

யுத்தம் மற்றும் விபத்துக்களில் கால், கை துண்டிக்கப்பட்டவர்களுக்கு செயற்கை அவயம் பொருத்தும் பணி கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் இடம் பெறவுள்ளது.

முதல் 35 பேருக்கு முன்னுரிமை அளிக்கப்படவிருப்பதால் தேவையானோர் உடன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி வைத்தியசாலை இயன் மருத்துவ அலகில் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## வீரசிங்கம் ம.வியில் செயற்பாட்டு அறை

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்துக்கு உலக வங்கியின் நிதி உதவியுடன் செயற்பாட்டறை அமைக்கப்பட்டுள்ளது. கல்வித் திணைக்களத்தினால் 30 லட்சம் ரூபா செலவில் இந்தச் செயற்பாட்டறை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டறையில் சங்கீதம், நடனம், மனையியல் ஆகிய பாடங்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-207)

## உயர் கல்வி

ஐரோப்பிய நாடுகளில் உங்கள் உயர் கல்வியை தொடர இது ஓர் அரிய வாய்ப்பு.
அனுமதிக்கு முந்துங்கள்
தொடர்புகளுக்கு:
Chaan1 @ live. com
00447404607282 0728951673

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 100/= 07.04.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை -0778996085
சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு -0776904590
நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி -0774656377
முகுந்தன், பருத்தித்துறை -0771392593
கோழி திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல.021 222 6944

## BIT CORNER

Professional ICT Education




பரீட்சையினை மையமாகக் கொண்டு ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனத்துடன் ஒழுங்கமைக்கப்பட்ட விரிவுரைகள் எம்மால் நிகழ்த்தப்படுகின்றது

**SEMESTER 2,4**

எமது தனித்துவமான விரிவுரையாளர்கள்

| 2nd Semester | 4th semester |
|---|---|
| * Maths<br>T.ஜதுபாலதரன் Bsc | * Project management<br>S.ஹரிகரகணபதி Bsc (Hons) |
| * Java<br>S.ஹரிகரகணபதி Bsc (Hons) | * Multi Media<br>S.றசிகரன் Bsc |
| * DBMS<br>S.சுதர்சன் Bsc | * Data Communication & Network<br>S.சுதர்சன் Bsc |
| * SAD<br>S.றசிகரன் Bsc | * RAD<br>T.கோகுல் Bsc |
| வகுப்பு நாட்கள் (சனி, ஞாயிறு) | * Java II<br>T.ஜதுபாலதரன் Bsc |

இல.14, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம்.
எம்மோடு இணைந்து உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றிடுங்கள்.
T.P: 0776621745




உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் பங்குனி மாதம் 21 ஆம் நாள் நாளை (04.04.2011) திங்கட்கிழமை காலை 9.40 மணி முதல் 10.55 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் பிரதமைத் திதியும் சித்த யோகமும் கூடிய இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ. இரத்தினசபாபதி சரஸ்வதி அம்மா ஐயரின் பௌத்திரனுமாகிய பிரம்மஸ்ரீ. இ.கனகசபாபதி சர்மா மீனாட்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனுமாகிய சிரஞ்ஜீவி | பிரம்மஸ்ரீ. சுப்பிரமணிய ஐயர் கமலா அம்பிகை அம்மா தம்பதியினரின் பௌத்திரியும் பிரம்மஸ்ரீ.சு.முருகானந்த சர்மா தனலட்சுமி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியுமாகிய சௌபாக்கியவதி |
| **பாலகிருஸ்ண சர்மா** அவர்களுக்கும் | **சாந்தினி** அவர்களுக்கும் |



கன்னிகாதான திருமாங்கல்யதாரணம் பாணிக்கிரஹணம் நடைபெற திருகோணமலை இரத்தினசிங்கப் பிள்ளையார் துணையுடனும், பத்திரகாளி அம்பாள் துணையுடனும் யாழ்ப்பாண வறுத்தலை விளான் மருதடி விநாயகர் துணையுடனும் வண்ணை வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமி திருவருளும் குருவருளும் துணைகொண்டு மேற்படி சுபமுகூர்த்தம் யாழ்.வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ. இ.கனகசபாபதி சர்மா தம்பதிகள் | பிரம்மஸ்ரீ. சு.முருகானந்த சர்மா தம்பதிகள் |
| இல. 65, கஸ்கிசன் வீதி, திருகோணமலை. | இல. 07, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். |
| 026 4917247 | 021 222 4588 |

இருவீட்டார் அழைப்பு

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வந்தோம், பார்த்தோம், சென்றோம் என்ற வாய்ப்பாடு வேண்டாமே!

வடக்கின் நிலைமைகளை- இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை- நேரில் கண்டறியும் பொருட்டு யாழ்ப்பாணத்துக்கு சர்வமதக் குழுக்கள் வர ஆரம்பித்துள்ளன. கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையிலான ஒரு குழுவும், நல்லிணக்கத்துக்கான வடக்கு- கிழக்கு சர்வமத ஒன்றியமும் யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பியுள்ளன.

போர் முடிவுற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் வேளை இது. இங்கு இராணுவ ஆட்சி நீக்கப்பட்டு சிவில் நிர்வாகமும் இயல்பு வாழ்க்கையும் திரும்பி உள்ள வேளை இது. அமைதியும், சமாதானமும் இரண்டறக் கலந்து அபிவிருத்தியை நோக்கி வீறுநடை போடுவதாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும் பிரசாரம் செய்யப்படும் காலம் இது.

ஆகையால், இங்குள்ள உண்மை நிலையை, மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கைக்கு ஏற்படும் குந்தகமான அம்சங்களை வெளிப்படுத்துவதற்கு இத்தகைய தூதுக்குழுக்களின் வருகைகள் உதவும். தூதுக்குழுக்களில் அங்கம் வகிப்போர் மதகுருக்களாக இருப்பினும் சரி, அரசியல் வாதிகளாக இருப்பினும் சரி, இங்கு தாம் காண்பவற்றை, மக்கள் கூறுபவற்றை அக்கறையுடன் உள்வாங்குகிறார்களா? உரிய இடங்களுக்கு எடுத்துச் சொல்கிறார்களா? அல்லது கண்டதற்கும் கேட்டதற்கும் எதிர்மாறான நிலைப்பாட்டைப் படம் போட்டுக் காட்டுகிறார்களா? என்பதனைப் பொறுத்தே நல்லெண்ண அல்லது நல்லிணக்கத் தூதுக்குழுக்களின் வருகைகளால் பயன் உண்டா? இல்லையா? என்பதனைக் கணிக்க முடியும்.

ஆனால், இங்கு வந்து செல்லும் தூதுக்குழுக்கள் எமது மக்களின் கஷ்டங்கள், துன்பங்கள், அச்சத்துடன் கூடிய வாழ்வு, ஜனநாயக உரிமைகளை முழு அளவில் அனுபவிக்க முடியாத இக்கட்டு நிலைமைகள், உண்மையைக் கூறினால் பிரதிபலன்கள் என்னாகுமோ என்று அச்சம் நிறைந்த போக்குப் போன்றவற்றை ஆளுந்தரப்புக்கு எழுத்திலாவது தெரிவிக்குமா என்பதிலேயே அவற்றின் விஜயங்களின் பயன்பாடு தங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் உண்மை நிலை பலருக்குத் தெரிந்தும், ஏன் அனுபவித்தும் கூட அதனை வெளியே சொன்னால் தமக்கு உண்டாகக் கூடிய பின் விளைவுகளை நினைத்து குடாநாட்டுக்கு வரும் தூதுக் குழுக்களிடம் வெளியிடுவதில்லை.

ஆனால், இவ்வாரம் இங்கு வந்திருந்த இரண்டு தூதுக்குழுக்களிடமும் பல உண்மைகள், மக்களுக்குள்ள உள்ளார்ந்த பிரச்சினைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

★குடாநாட்டில் இராணுவத்தின் தலையீடு அதிகமாக உள்ளதால் மக்களிடத்தில் காணப்படும் பய உணர்வு இன்னும் அகலவில்லை--

★அமைதி வெறுமனே வெளிப்படையாகக் காணப்படும் மௌனம் அல்ல. மனித உள்ளங்களில் அது அனுபவிக்கப்பட வேண்டும்--

★சமாதானம் இருக்கும் இடத்தில் ஒற்றுமையும் ஒன்றித்த நிலையும் இருக்கும். ஆனால், பயம் இருக்காது. எனினும், போர் முடிவுற்று ஒன்றரை வருடங்கள் கழிந்து விட்ட போதிலும், வடபகுதி மக்கள் பயத்துடனேயே வாழ வேண்டியுள்ளது. குடாநாட்டு மக்களின் குடும்ப, சமூக விவகாரங்களில் கூட இராணுவத்தினர் மூக்கை நுழைத்துத் தலையிடுவதே பயத்துக்குக் காரணம். பயம் இருக்கும் இடத்தில் உண்மை, நேர்மை, புரிந்துணர்வு என்பன இருக்கமாட்டா-

★நாட்டில் அமைதி உண்டாகி விட்ட போதிலும் வடக்கில் மக்கள் அப்படி நினைக்கவில்லை; அவர்கள் அமைதியினைச் சுவைக்கவில்லை---

★தடுப்பு முகாம்களில் விசாரணை இன்றிப் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் திடீரென இறந்துள்ளனர். காரணம் தெரியவில்லை. அவ்வாறு இருக்கும் போது தமிழ் மக்களால் அமைதியை எவ்வாறு உணரமுடியும்; சுவைக்க முடியும்?---

குடாநாட்டு மக்களில் பலரும் வெளியிட முன்வராத தகவல்கள் இவை.

பொறுப்புள்ள பலர் இப்போது அவற்றை வெளியிட்டுள்ளனர். அவர்கள் கூறியவற்றை வைத்துக்கட்டுதல் என்றோ, ஊதிப் பெருப்பிக்கப்பட்டவை என்றோ இங்கு வந்த சர்வமதக் குழுக்கள் தட்டிக்கழித்துவிட முடியாது; தட்டிக் கழிக்கக் கூடாது.

யாழ்ப்பாண மக்களின் இன்றைய உண்மை நிலை எத்தகையது என்பதனை இங்கு வந்த தூதுக்குழுக்கள் உள்வாங்கிக் கொள்ளத் தயாரில்லையானால், அல்லது விவரங்களைச் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவித்து நிவாரணம் பெற்றுக் கொடுக்க முனைப்புக் காட்டவில்லையானால்---

தெற்கிலிருந்து வடக்கே வரும் எந்தக் குழுவின் மூலமாகவேனும் உருப்படியாக எதுவும் விளையாது. வந்தோம், பார்த்தோம், சென்றோம் என்ற வாய்ப்பாடே மிஞ்சும்.

தாம் குடாநாட்டில் கேட்டறிந்த நிலைப்பாடுகளை உள்ளவாறே வெளிப்படுத்த- அரச தரப்புக்கு எடுத்துச் சொல்வதற்கு- தயக்கமெனில் -

அவ்வாறு சொல்வதால் அரசைப் பகைத்துக் கொள்ள நேரிடும்; அதனால் வீண் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும் என்று நினைத்தாலோ; குடாநாட்டில் வாழும் மக்களின், உண்மையான நிலையை உலக மட்டத்திலாவது தெரியப்படுத்த முன்வர வேண்டும்.

இலங்கையில் இப்போதுள்ள ஆட்சி அதிகார நிலையில் வெளிப்படுத்தப்பட்ட குடாநாட்டின் மக்களது உண்மையான நிலைமை அவ்வாறில்லை என்று சாதிக்கவே முயலப்படும்; நிலைநாட்ட இயலக் கூடிய மார்க்கங்களில் எல்லாம் முயற்சிக்கப்படும். குடாநாட்டில் எந்த விதத்திலும் களங்கமற்ற அமைதியும் இயல்பு நிலையும் நிலவுவதாக அடித்துக் கூறப்படும்.

வடக்கில் மக்களால் அமைதியைச் சுவைக்க முடியவில்லை. அவர்கள் நித்தம் நித்தம் பயத்துடனேயே வாழ்கின்றார்கள் என்பது யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மட்டுமன்றி-

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு - போரினால் அனேகமாக நிர்மூலமாகியுள்ள வன்னிக்கு- பல மடங்கு பரிமாணத்தில் பொருந்தும் என்பதையும் தூதுக் குழுவினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பகுதிகளுக்கும் தூதுக் குழுக்கள் நேரில் விஜயம் செய்ய வேண்டும்.

குடாநாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை விட மிக மிக மோசமான, பல மடங்கு சீரழிந்த, பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் கொலையுண்ட, ஜனநாயக உரிமைகள் என்றால் எவை என்று கேட்கும் நிலையில் அப்பகுதி மக்கள் நாள்களைக் கழிக்கின்றனர். அவர்களின் கதியையும் அரசுக்கு எடுத்துக் கூற வேண்டும். உண்மையான அமைதிக்கும் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் உதவ அரசை வலியுறுத்த வேண்டும்.

ஒவ்வொன்றும் தத்தமக்கென வெவ்வேறு வகையான அட்டவணைகளை வைத்துக் கொண்டு, இங்கு வந்தும், பார்த்தும், கேட்டும் போவதால் தமிழ் மக்கள் தேடும் அமைதியும், அபிவிருத்தியும் அச்சமற்ற வாழ்வும், சமாதானமும் உண்மையான சுதந்திரமும் கிட்டத் தானும் வருமா?

அவற்றைப் பெற்றுத் தர இயலுமா இங்கு வரும் தூதுக் குழுக்களால்?

## 'நொதேர்ன் பவர்' இயந்திரம் பழுது; இதனாலேயே அடிக்கடி மின்வெட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.மாவட்டத்துக்கான மின்சாரத்தை வழங்கிவரும் 'நொதேர்ன் பவர்' நிறுவனம் 10 மெகாவாற்ஸினால் தனது மின் உற்பத்தியைக் குறைத்தமையே அடிக்கடி மின்வெட்டு இடம்பெறக் காரணம் என மின்சார சபையின் யாழ். அலுவலக அதிகாரியொருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

17.5 மெகாவாற்ஸ் மின்சாரம் இதுவரை நாளும் வழங்கப்பட்டு வந்ததாகவும், தற்போது 7.5 மெகா வாற்ஸ் மின்சாரமே வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிறுவனத்தின் மின் பிறப்பாக்கிகளில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இந்த நிலை எப்போது சீரடையுமெனக் கூற முடியாதெனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை- யாழ்.குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் பகல் மற்றும் இரவு வேளைகளில் முன்னறிவித்தல் எதுவுமில்லாமல் மின்சாரம் திடீர் திடீரெனத் தடைப்படுவதால் அன்றாட அலுவல்களை நிறைவேற்ற முடியாதுள்ளதாகப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டில் கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாக இந்த மின்தடை பல பிரதேசங்களிலும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. பகல் வேளைகளிலும் இரவு வேளைகளிலும் இந்தத் திடீர் மின்தடை அடிக்கடி ஏற்படுகின்றது.

முன்னறிவித்தலின்றி மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தத் திடீர் மின்தடையினால் பாவனையாளர்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர்.

இந்தத் திடீர் மின்தடை காரண மாக வீடுகளில் உள்ளமின்உபகரணங்களும்அடிக்கடி பழுதடைகின்றன எனப் பாவனையாளர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், பகல் நேரங்களில் ஏற்படும் மின் தடை காரணமாக அரச மற்றும் தனியார் அலுவலகங்களின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. மின்தடை காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனப் பெற்றோர்கள் தரப்பில் விசனம் தெரி விக்கப்படுகின்றது.

(த-15-26)

## பரீட்சைக் காலத்தில் மட்டும் ஏன் மின் வெட்டு; மாணவர்களின் கல்வியைப் பாழடிக்கும் முயற்சி!

### கல்விமான்கள், மதகுருமார்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.3

குடாநாட்டில் பரீட்சைக் காலத்திலேயே இரவு நேரங்களில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்களின் கல்வியைப் பாழாக்கும் நடவடிக்கையின் ஓர் அங்கமே இது எனக் கருதவேண்டியுள்ளது என்று கல்விமான்கள், மதகுருமார்கள் கூறுகின்றனர்.

கடந்த வருடமும் ஓகஸ்டில் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையும் டிசெம்பர் ஜி.சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சையும் நடந்த காலங்களில் இரவு நேரத்தில் மின்வெட்டு நடைமுறைக்கு வந்தது.

இப்போதும் கூட முதலாம் தவணைப் பரீட்சை நடைபெறும் காலத்தில் திட்டமிட்டு மின்வெட்டு நடைமுறைப் படுத்தப் படுகின்றது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பரீட்சைக் காலத்தில் மின் வெட்டு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாகவே கருத வேண்டியுள்ளது. மாணார்களின் கல்வி நிலையைப் பாழடிக்கும் நோக்கில் திட்டமிடப்பட்ட முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாக எண்ணத் தோன்றுகின்றது என்று கல்விமான்களும் மதகுருமார்களும் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ)

## முகாமைத்துவ உதவியாளர்களுக்கு ஏப்ரல் 8இல் நியமனம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப்.3

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகப் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி. இராஜநாயகம் அறிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் 283 பேருக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான நியமனக்கடிதங்களை வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தவிர்க்க முடியாத காரணத்தால் நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் எனப் பிரதிப்பிரதம செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-14)

## வித்தகபுரத்தில் குடியமர்ந்தவர்களுக்கு சிமெந்து, தகரம் விரைவில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப்.3

தெல்லிப்பழை, வித்தகபுரம் ஜே/223 கிராம பிரிவுக்குட்பட்ட பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

வித்தகபுரப் பகுதியில் மீளக்குடிய மர்ந்த 527 குடும்பங்களில் அடிப்படை வசதிகளற்ற 227 குடும்பங்களுக்கான சிமெந்து, தகரம், மலசலகூட வசதிகள் என்பன வழங்கப்படவுள்ளன.

இந்த உதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 227 குடும்பங்களை பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வருகை தருமாறு தெல்லிப்பழை பிரதேச செயலர் முரளிதரன் கேட்டுள்ளார்.

வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டபின்னர் அந்தப் பகுதிகளில் மீள்குடியமர்வதில் மக்கள் அதிகளவு ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், அங்கு மலசலகூடம் மற்றும் குடிதண்ணீர் வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(323)

## A/C விற்பனைக்குண்டு

5 நாள்கள் பாவித்த L.G மொடெல் A/C உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு:
0776944355, 02 1520 9308.

## விற்பனைக்கு

பத்துமாதம் பூர்த்தியான யேமன்சப்பேட் அல்சேசன் ஆண் நாயும் கிறேடன் பெண் நாயும், 6 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் நாய்க் குட்டிகளும் வான்கோழிகளும் யமுனாபாறி ஆடும் குட்டியும், சணல் ஆடும், சேரல் மொட்டை ஆடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: லி.மயூரன்,
இல.209, ராஜாபிளாசா முன்பாக,
பலாலி றோட், கோண்டாவில்.

# புத்தாண்டை ஒட்டி சனி, ஞாயிறு தினங்களில் கடைகள் திறக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்.3

எதிர்வரும் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்யலாம் என யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் யாழ். வர்த்தகர்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ஐ)

## கலைஞர்கள் கௌரவிப்பு

ஈழத்தின் முன்னணி இசைக் கலைஞர்களைக் கௌரவிக்கும் விழாவும் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் வரலாற்றுச் சிறப்பினைக் கூறும் ஒலிப்பேழை வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30மணிக்கு மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயத் திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளன.

சிறந்த பாடகர்களான எஸ்.ஜி. சாந்தன், கே.ரகுநாதன், எஸ்.குமாரசுவாமி ஜெயசுகுமார் ஆகியோர் சிறந்த பாடலாசிரியராகச் சிவசுப்பிரமணியம், சிறந்த அறிவிப்பாளராக எம்.மோகன்ராஜ், சிறந்த இசையமைப்பாளரான யாழ்.ரமணன் மற்றும் சிறந்த ஒலிப்பதிவாளரான கே.சத்தியன் ஆகியோரே பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ்.ரமணனின் பின்னணி இசையமைப்பில் வடபுலத்தின் முன்னணிப் பாடகர்களினால் பாடப்பட்ட மூளாய் வதிரன்புலோ விநாயகப் பெருமானின் வரலாற்றுச் சிறப்பைக் கூறும் பாடல்கள் ''வதிரேஸ்வரஸ்தம்'' என்னும் தலைப்பில் ஒலிப்பேழையாக வெளியிடப்படவுள்ளது. (ஐ-323)

## மகிழ்வு பொங்கப் பாராட்டுகிறோம்

எமது இனிய நண்பர் காரை மணிகண்டன்
லயன் கனகசபை சுந்தரலிங்கம்



காரை மண்ணில் பிறந்து
இந்துவின் மாணவனாய்
மலர்ந்து சமூக சேவைகள்
பல செய்து சமாதான
நீதிவான் என்னும் தகைமை
பெற்று சமாதான நீதிவான்
களுக்கான மனித உரிமை
அமைப்பின் திருநெல்வேலி
நகரப் பிரதிநிதியாய் சிறப்புப் பெற்று
தரகு தொழிலை
தனக்கென ஒரு தனித்தன்மையுடன்
செய்து வரும்வேளை
'பொன்னுக்குப் பொட்டு வைத்தது'
போல் சிறப்பு விருதான 'கலாநிதி'
என்னும் பட்டம் பெற்றமையையிட்டு
அவரை வாழ்த்துவதுடன்
அவர் வண்ணை கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள்
அருட்கடாட்சம் பெற்று மேலும் பல
சிறப்புகள் பெற வேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்
M.K. சிங்கம் - பிரான்ஸ்,
R. துரைரத்தினம் -கன்னாதிட்டி,
S. கிருஸ்ணபாலா - கொட்டடி.

(2821)(41,23,25)

## மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்



பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்

யாழ். மண்ணில் கல்விப்புலத்தின் மகுடமாம் யாழ். பல்கலைக்கழகத்தில் 01.04.2011 இல் துணைவேந்தராய் பதவி ஏற்று மகளிருக்கே மாண்பு சேர்த்த எங்கள் மகளிர் கல்லூரியின் பழைய மாணவி பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களை மனம் நிறைந்து மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி,
சாவகச்சேரி.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள். (35)


(2876)

## பிரியாவிடையும் வரவேற்பும்

வந்தார் வென்றார் | வருகிறார் வெல்லுவார்



சி.பெ.அரசகுமார்



பொன். பாலகுமார்

மக்கள் பணியாற்றுவதே வங்கிகளின் கடமை. அந்தக் கடமையை தன் தலைமேல் ஏற்றி பணிபுரிந்து தற்போது இளைப்பாறும் இப் பிரதேசத்து மக்களின் மனம் கவர்ந்த இலங்கை வங்கி முகாமையாளர்

*சி.பெ.அரசகுமார்*

அவர்களுக்கு எமது மனம் கனிந்த வாழ்த்து க்கள். அவர் பணி தொடர புதிதாக கடமையை பொறுப்பேற்க வந்திருக்கும் புகழ் பூத்த நாடக கலைப் பேரரசு *ஏ.ரி.பொன்னுத்துரை* அவர்களின் மைந்தன்

*பொன். பாலகுமார்*

அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

''தவம் ஸ்ரோர்ஸ்''
அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.

(2901)

எஸ்.தவராஜா

## வீடு வாடகைக்கு

சகல வசதியுடன் விசாலமான வாகனத் தரிப்புடன் கூடிய வீடு யாழ். மருத்துவபீடத்துக்கு முன்பாக நீண்ட/ குறுகிய கால அடிப்படையில் குத்தகை/ வாடகைக்கு.

அரச/ தனியார் நிறுவன/ விருந்தினர் மாளிகை/ கந்தோருக்கு உகந்தது.

தொடர்பு ரெலிபோன் மூலம்
0774- 404 231

## வேலைக்கு ஆள் தேவை

பாமசி கற்கை நெறி படித்த அல்லது பாமசியில் வேலை செய்த அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு: 0772700190, 021 320 1373

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, சதயம் 1 ஆம் பாதம், 1977 ஆம் ஆண்டு பிறந்த B.B.A, M.B.A படித்து UK யில் Work Permit இல் வேலை செய்யும் 5' 8" உயரமுள்ள மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. அத்துடன் யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 1975 இல் பிறந்த 7 இல் செவ்வாய் உள்ள கிரகபாவம் 26 ½ உடையதும் B.B.A (Hons), M.Sc. படித்த அரச கணக்காளராகப் பதவி வகிக்கும் மணமகனிற்குப் படித்த அழகிய மணமகள் தேவை.

தொடர்பு: 0778446028, 0750422046

## காணி விற்பனைக்குண்டு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக மருதடி வீதியில் நல்லூர், யாழ்ப்பாணத்தில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே: 0776524975

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 863 திகதி: 31.03.2011

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| X | 03 | 24 | 31 | 35 | 15 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 12,500,134.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 319 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15893 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 221787 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 33070 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ:
**8,724,440.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**12,895,376.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

## IDM

City Campus # 3

மாணவர்களினதும் தொழில்புரிவோர்களினதும் வேண்டுகோளுக்கமைய
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Foundation Programmes**
- Diploma in ICT
- Diploma in Business Management

**Higher Diploma Programmes**
- HND in Software Development
- HND in ICT System Support
- HND in Business Management

**School of Software Engineering**
- ASP.Net
- VB.Net
- C#.Net
- Java

**School of Multimedia Programmes**
- Certificate in Multimedia Web Applications
- Autocad
- Adobe Photoshop
- Corel Draw

**Administrative Studies**
- ICDL
- DICAP
- QuickBooks 2008
- Tally
- Web Designing

**Certificate in MS Office**

இதோ ஆரம்பம் !

விடுமுறை கால மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க Microsoft நிறுவனத்தினால் அங்கிகரிக்கப்பட்ட தரித கற்கைநெறி.

Course Contents
- Unit-1- Concepts of Informaton Technology
- Unit-2 - Computer Environment
- Unit-3 - Word Processing
- Unit-4- Spreadsheet
- Unit-5- Database Concepts
- Unit-6- Presentation
- Unit-7- Informaton & Communicaton

*Batches Start On*
*04-04-2011 ,9.00am / 3.00pm*
*06-04-2011 ,9.00am / 3.00pm*
*09-04-2011 ,9.00am / 3.00pm*
*18-04-2011 ,9.00am / 3.00pm*

**IDM Affiliated Campus**
#216, Navalar Road, Jaffna. Tel: 0212229901

# யாழ்.பல்கலைக்கழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைவோம்

## பதவியேற்பு நிகழ்வில் புதிய துணைவேந்தர்

யாழ்ப்பாணம் ஏப்.3

இதுவரை காலமும் பல் கலைக் கழகத்தின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது, அதனை எவ்வாறு சமாளிப்பது என்பதிலேயே அதிககவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. இனிமேல் யாழ். பல்கலைக்கழகத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று யாழ். பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக நேற்றுமுன்தினம் பதவியேற்றபின்பல்கலைச் சமூகத்தைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் தகைமை குறித்து சிலர் குறை கூறுகின்றார்கள். இந்த நிலைமை ஆசிரியர்களின் தகைமையினத்தையே குறித்து நிற்கின்றது என்பதே என்னுடைய கருத்தாகும்.

இந்த நிலைமை எதிர்காலத்தில் மாற்றப்படவேண்டும். சகல துறைகளிலும் மிளிர்கின்ற ஆளுமை மிக்க பட்டதாரிகளை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு ஆண்,பெண் வேறுபாடின்றி செயற்படவேண்டும்.

எதிர்காலத்தில் எமது பல் கலைக்கழகத்தைச் சிறந்த முறையில் வழிநடத்த அனைவரும் என்னுடன் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் - என்றார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்ட துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், நண்பகல் 12 மணியளவில் சம்பிரதாய பூர்வமாகப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

இதில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உட்படத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-9-14)

## பருத்தித்துறை கோட்டதமிழ்த் தினப்போட்டி

பருத்தித்துறை, ஏப். 3

பருத்தித்துறைக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த் தினப்போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

எழுத்தாக்கப்போட்டிகளில் பிரிவு 5 இற்குரிய போட்டி தவிர்ந்த ஏனையவை எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பிரிவு 5 இற்குரிய எழுத்தாக்கப்போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளன. எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய போட்டிகள் ஏப்ரல் 29, 30ஆம் திகதிகளில் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ஐ-190)

### புதிய பாதையில்...



பெண் தலைமைத்துவம்: யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராகப் பொறுப்பேற்பதற்கு முன்னர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெற்ற வழிபாட்டின்போது குருக்களிடம் இருந்து காளாஞ்சி பெற்றுக் கொண்டார். பின்னர் அவர் துணைவேந்தர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வ ஆவணத்தில் கையொப்பமிடுகிறார். (த-9-14)

## நீதிமன்ற ஊழியர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஆரம்பம்

தென்மராட்சி,ஏப்.3

யாழ்.மாவட்டத்தில் உள்ள நான்கு நீதிமன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம், ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களிலில் கடமையாற்றும் 44 உத்தியோகத்தர்களுக்கு நேற்றுமுன்தினம் தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இந்தப் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவகத்தினர் நீதி அமைச்சின் செயலாளரின் ஏற்பாட்டில் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் இதனை நடத்துகின்றனர்.

நீதிமன்றத் தாபன வேலைகள், கணக்கு வேலைகள், வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக நடத்தப்படும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் அரச திணைக்கள உயர் அதிகாரிகள் விரிவுரைகளை நடத்தவுள்ளனர்.

நீதிமன்ற உத்தியோகத்தர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் வினைத் திறமைக்கான தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்குமாக இந்தப் பயிற்சிநெறி நடைபெற்று வருகின்றது.

யாழ்.மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை நடைபெறுவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-207)

# மணியந்தோட்டத்தில் குடியமர்ந்தோருக்கு எந்தவித கொடுப்பனவும் இதுவரை இல்லை

## அரச அதிபருக்கு அவர்கள் மகஜர்

யாழ்ப்பாணம்,ஏப்.3

வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி முகாமிலிருந்து வந்து மணியந்தோட்டத்தில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இதுவரை எந்தவிதக் கொடுப்பனவுகளும் வழங்கப்படாமையைச் சுட்டிக்காட்டிப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அவர்கள் கையளித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மன்னார், தெட்சணா மருதமடு நலன்புரி முகாமில் வசித்து வந்தோம். பின்பு 'எடிபல' இராணுவ நடவடிக்கையின் போது 1999 ஆம் ஆண்டு வவுனியா, சிதம்பரபுரம் முகாமில் 12 வருடங்கள் இருந்து கடந்த ஆண்டு மணியந்தோட்டத்தில் மீள்குடியமர்ந்துள்ளோம்.

இதுவரை எமக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவாகிய ரூபா 25 ஆயிரம், 20 ஆயிரம், 5 ஆயிரம் என வழங்கப்படும் பணம் எதுவும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகளிடம் கேட்டபோதும் எவ்வித உதவிகளும் கிட்டவில்லை.

தொழில் வசதிகள் இருப்பிட வசதிகள் இன்றிப் பெருஞ்சிரமப்படும் மக்களின் துன்பத்தை நீக்கி வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப இந்தக் கொடுப்பனவுகளை வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அந்த மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை -

கொழும்புத்துறை மணியந்தோட்டப் பகுதியில் உள்ள காணிகளின் அளவீட்டுப்பணி நிறைவடையாமையினால் அந்தப் பகுதி மக்கள் தமது காணிகளைச் சுற்றி வேலிகளை அமைக்க முடியாது பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-26-135)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு

தென்மராட்சி, ஏப்.3

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கிலஆசிரியர்களாக உள்வாங்குவதற்கான பரீட்சைகளில் தோற்றிய அனைவரையும், எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை, வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளரைச் சந்திக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை, கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் மூலப் பிரதிகளுடன் இரு புகைப்படப்பிரதிகளையும் பணிப்பாளரைச் சந்திக்கவரும் போது கொண்டுவருமாறும் அறிவித்துள்ளார். (எ-207)

# அரைகுறையாக அராலி வீடமைப்புத் திட்டம்

## எம்.பிக்களிடம் மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.3

அராலி மேற்கு மீனவர் கிராமத்தில் அரசினாலும் அமைச்சர்களினாலும் உறுதியளிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட மீனவர் வீடமைப்புத் திட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் அனைத்தும் அரைகுறைக் கோலத்திலேயே காணப்படுகின்றன.

அரைகுறைக் கட்டடங்கள், கூரைகள் இல்லாத வீடுகள்தான் வற்றிலேயே நாம் வசிக்கின்றோம். குடிப்பதற்குக் குடிதண்ணீர் இல்லை, மலசல கூடங்கள் இல்லை, பிள்ளைகள் படிப்பதற்குப் பாடசாலை இல்லை, பாதை வசதிகள் இல்லை என அராலி மேற்கு மீனவர் கிராம மக்கள் கண்ணீர் மல்கக் கூறினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை பின் தங்கிய மீனவ மற்றும் விவசாயக் கிராமங்களுக்குப் பயணங்களை மேற்கொண்டனர். இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறீதரன் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். அராலி மேற்கு மீனவக் கிராமத்தில் அந்த மக்களின் அவல நிலையைக் கண்டறிந்தனர்.

அராலி மேற்கு வேலவன் கடற்றொழிலாளர் சங்கச் சனசமூகநிலையத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது அந்தமக்கள் தமது குறைபாடுகளை முன்வைத்தனர்.

இவற்றைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உடனடித் தேவையான கழிவறைகளைக் கட்டிக் கொடுக்கத் தனது நிதியில் இருந்து ஒருலட்சம் ரூபாவை வழங்குவதாக உறுதியளித்தார்.

மேலும் இந்தக் கிராம மக்களினால் முன்வைக்கப்பட்ட குறைபாடுகள் அனைத்தையும் மீனவ அமைப்பின் ஊடாக நிவர்த்தி செய்வதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கூறினார். (த-02)

# விற்பனைக்கு

A.C. உடன் கூடிய தரமான Toyota வாகனம் ஒன்று விற்பனைக்குண்டு.



தொடர்பு கொள்ள
T.P: 0772520030


# 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



**அமரர் காசிப்பிள்ளை நாகரட்ணம் (ராசனக்கா)**

தோற்றம் 19.01.1928 — மறைவு 14.03.2011

கடந்த 14.03.2011 திங்கட்கிழமை அன்று பூர்வபக்க தசமி திதியில் சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு காசிப்பிள்ளை நாகரட்ணம் (ராசனக்கா) அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நினைவு அஞ்சலி நிகழ்வுகளும் இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபம் தியாகி அறக்கொடை நிறுவனத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சொர்ணாம்பிகை மண்டபம்,
தியாகி அறக்கொடை நிறுவனம்,
இல.527,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212228025

குடும்பத்தினர்.
(கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்).

(2921) (44-27-19)

## கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.3

இன்று நடைபெறவிருந்த யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம)


**படிவம்**

சுகாதார அமைச்சு மாணவ தாதியர் பயிற்சிக்கான விண்ணப்பப்படிவம் விற்பனைக் குண்டு.

முடிவு திகதி 30.04.2011

Bharaty Pathippakam.
430, K.K.S Road, Jaffna.


# அறிவித்தல்

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து), கொடிகாமம்.

**கிளைக் குழுக்களைத் தெரிவு செய்தல்-2011.04.10 ஞாயிற்றுக்கிழமை**

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20.02 இன் படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி சங்கத் தின் பின்வரும் கிளைகளின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்காக இக் கிளைகளின் பொதுச் சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதி களின் பந்தி 9 இற்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01.கிளைப் பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பம் 2011.04.10 ஞாயிற்றுக்கிழமை.
02.கூட்டம் நடைபெறும் இடங்கள் விவரம் கீழ்வருமாறு:

| தொ.இல | கி.இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 208 | கச்சாய் | வெள்ளாம் போக்கட்டி பாலர் பாடசாலை. |
| | 209 | அல்லாரை | |
| 02. | 211A | தவசிகுளம் | யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை. |
| 03. | 211B | பாலாவி | யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை. |
| 04. | 212 | உசன் | பாலி பனம் பராமரிப்பு நிலையம், கொடிகாமம் தெற்கு. |
| | 213 | மிருசுவில் | |
| 05. | 221 | தனிவளை | அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் யா பாடசாலை,நாவற்காடு. |
| | 217 | நாவற்காடு | |

A-9 வீதி,
கொடிகாமம்.

இ.சிவகுரு, கௌரவ செயலாளர்,
கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

(21,23, 42)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 ★ 10 ★ 1927



மறைவு 13 ★ 04 ★ 2010

## அமரர் தவமணி முத்துரத்தினம்

திதி:அமாவாசை

அன்பாலும் பாசத்தாலும் அனைவரையும்
அரவணைத்த எங்கள் தெய்வமே! அன்புத் தாயே
இறைவன் உம்மைப் பிரித்தாலும் மாறாது உமது
நினைவுகள், மறவாது உம் முகம்
சித்திரம் போல் சிரித்து நின்ற உம் அழகை சிலை வடிவில்
பார்த்திட நாம் என்ன பாவம் செய்தோமம்மா
பாசத்தின் சிகரமென பாரினிலே வலம் வந்து சுகத்தின்
உறைவிடமாய் அனைவரையும் காத்து நின்ற பேசத்தரும்
தெய்வமெனப் போற்றிட வாழ்ந்திருந்த உம்மை நாம்
தினம்தினம் போற்றிடுவோமே

பாசத்துடன் நினைவுகூரும்:
குடும்பத்தவர்கள், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஞான வைரவர் ரோட்,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(2993)


**காணி விற்பனைக்குண்டு**

கச்சேரி- நல்லூர் ரோட்டில் (மாநகர சபை அருகில்) சுற்று மதில் நன்னீர் கிணற்றுடன் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
021 2226944, 0772557605

**காணி தேவை**

யாழ்.மாவட்டத்தில், 5-10 வருடங்களுக்கு தோட்டக்காணி குத்தகைக்குத் தேவை (5லட்சம் முற்பணம் கொடுக்கப்படும்)
தொடர்பு:- 0771362148.

**தேவை**

யாழ் மத்தியில் (நல்லூர்) ROOM (அறை) துப்பரவு செய்பவர்(ஆண்/பெண்), சமையல் உதவியாளர் (பெண்)தேவை.தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவர்களுக்கு முன் உரிமை, சம்பளம் நேரில் பேசலாம். 0750427473, 021 4900626.

# ஆசிரி ஆய்வுகூட சேவைகளும் வைத்திய ஆலோசனைகளும்
## ASIRI LABORATORY SERVICES AND CHANNEL SERVICES

யாழ். மக்களுக்கு !

01.04.2011 இல் இருந்து பின்வரும் வைத்திய நிபுணர்களால் நோயாளர்கள் பார்வையிடப்படுவார்கள் இந்த ஆசிரி ஆய்வுகூட சேவையானது சகல வசதிகளும் கொண்டதாக அமையப்பெற்றது.

(குளிரூட்டப்பட்டதும், வசதியான இருக்கைகளைக் கொண்டதும், வாகனத் தரிப்பிட வசதிகள் கொண்டதுமாக அமையப்பெற்றது.

- ECG மற்றும் இரத்த, சிறுநீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பெறுபேறுகளை துரித கதியில் பெற்றுக்கொள்ள முடியும்.

இங்கு -

- சத்திரசிகிச்சை நிபுணர்கள்
- பெண்நோயியல் நிபுணர்கள்
- பொது வைத்திய நிபுணர்கள்
- இருதய நோய் வைத்திய நிபுணர்கள்
- காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்கள் (E.N.T)
- தோல் வைத்திய நிபுணர்கள்

போன்ற வைத்திய நிபுணர்களின் வைத்திய ஆலோசனைகளைப்பெற்றுக்கொள்ளலாம்.

தொ.இல. 021 7389396
தொலைநகல் (Fax) - 0217389390

ஆசிரி ஆய்வு கூட சேவை
இல: 92, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

# சந்தைப்படுத்தல் நிர்வாகிகள்
## யாழ்ப்பாணம்

நாடளாவிய ரீதியில் நிதிச் சேவைகளை வழங்கும் முன்னணி நிறுவனமான சென்றல் பினான்ஸ் கம்பனியின் யாழ்ப்பாண கிளையில் சந்தைப்படுத்தல் நிர்வாகிகள் பதவிக்கான வெற்றிடம் உள்ளது. இப்பதவியை வகிப்பவர்கள் எமது நிதிச் சேவைகளுக்கான வாடிக்கையாளர்களை இனங்கண்டு சேவைகளை அபிவிருத்தி செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் நல்ல கல்வித் தராதரப் பின்னணியுடன், உத்வேகமும், ஆர்வமும் மிக்கவர்களாக விளங்க வேண்டும். சந்தைப்படுத்தல் துறையில் தொழில்சார் தராதரங்களைக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது. அத்துடன், விற்பனைத்துறையில் ஆற்றலும், சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தபட்சம் மூன்று வருடகால அனுபவமும் கொண்டிருக்க வேண்டும். நிதிச் சேவைத்துறையில் அனுபவம் பெற்றிருப்பது ஒரு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும். மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பது அத்தியாவசியமானதாகும்.

சாவகச்சேரி / நெல்லியடி / கிளிநொச்சி / சுன்னாகம் ஆகிய இடங்களில் இருந்து விண்ணப்பதாரிகளைச் சேர்துக்கொள்ள நாம் விரும்புகின்றோம். ஆங்கில மொழி அறிவையும், சிங்கள மொழியைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் கொண்டிருப்பது அத்தியாவசியமானதாகும்.

இப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்களுக்கு சந்தை தராதரங்களுக்கு அமைய நல்ல கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தயவுசெய்து உங்கள் விண்ணப்பத்தை உறவினர்களல்லாத இரு சான்றுபகர்னர்களின் பெயர்கள் மற்றும் தொடர்புத் தொலைபேசி இலக்கங்கள் சகிதம் 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர் (HR&D)
சென்றல் பினான்ஸ் கம்பனி பீஎல்சி
270 வொக்ஷோல் வீதி, கொழும்பு 2
மின்னஞ்சல்: hrd@cf.lk

# அகவை ஐம்பதில் கால் பதிக்கும் நாகதீப ரஜமகா விகாரையின் விகாராதிபதி வண.பதுமகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரோ (J.P)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உலகில் பொறுமையைப் போதித்த புத்தபகவானின் புனித பாதங்கள் பதிக்கப்பட்ட நாகதீபம் என சிறப்பிக்கப்படும் நயினை மண்ணில் தமது 11ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்து இன்று 38 வருடங்கள் பூர்த்தியடைந்து நாகதீப ரஜமகா விகாரையின் விகாராதிபதியாக உயர்ந்து இன்று அகவை ஐம்பதில் கால்பதிக்கும் வண. **பதுமகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரோ** (J.P) அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இந்தச் சித்திரை மாத பௌர்ணமியிலேயே புத்தபகவான் நயினைக்கு வருகைதந்த சிறப்பும், நயினைக்குப் பெரும் தொண்டாற்றியவரும், இன்று அகவை ஐம்பதைக்காணும் தேரருடைய வருகையிலும், வளர்ச்சியிலும் பணியாற்றியவரும் நயினை மக்களால் பெரியசாமியார் என அழைக்கப்பட்ட வண.பிறாக்மனவத்தே தர்மகீர்த்தி திஸ்ஸ மகாநாயக்கதேரோ (1914) அவர்களுடைய 8ஆவது சிரார்த்த தின நிகழ்வும் வருவது குறிப்பிட்டத்தக்கதாகும். பெரியசாமியார் விட்டுச் சென்ற பணியை மறவாது சிறப்பாகச் செய்து நயினை மண்ணுக்குத் தொண்டாற்றும் தேரோ அவர்களை அகவை ஐம்பதில் நலமோடு நீண்டு வாழ நயினை மக்களின் சார்பாக நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

**நன்றியுணர்வோடு**

**நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கம்.**

# முதல் மாதத்திற்கு வட்டி இல்லாத




இன்றே அருகிலுள்ள NDB வங்கிக்கு வாருங்கள்.

அழையுங்கள் 011 2 44 88 88

வாழ்க்கையை நிதமும் மாற்றும்

NDB வங்கி

---

### வீடும் காணியும் விற்பனைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் ஒரு பரப்புக் காணியும், வீடும் உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779333139, 0759542144.

### மணமகள் தேவை

யாழ்.கிறிஸ்தவம் (Rc) கௌரவ குடும்பம் 1980.10.04ஆம் திகதி பிறந்த (நட்சத்திரம் ஆயிலியம் 1ஆம் பாதம்) கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த, அரச உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை.

தொடர்பு: M.தனராசா நீதிமன்ற வீதி, மல்லாகம். T.P: 0776660640

### வீடு, காணி விற்பனைக்கு

கைதடி தெற்கு மகாவித்தியாலயத்துக்கு அருகில் 3 பரப்புக்காணியில் வீடு வரும் படியுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0772105373

### A/C விற்பனைக்கு

மிக நல்ல நிலையில் உள்ள WINTOW A/C18000 BTU விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0718565375

---

# INVITATION TO BID
## Procurement of Goods
## (ITB/TRP/ MUL/72383/06)

UNDP Sri Lanka

The United Nations Development Programme (UNDP) - Transition Recovery programme supports economic recovery in the North and East through the revival and development of traditionally productive and alternative income generating livelihood activities as well as community related infrastructure and Housing through a package of inter-related activities utilizing a community oriented and integrated approaches.

To this effect, the United Nations Development Programme in Sri Lanka invites eligible National and or International suppliers, authorized dealers and or distributors to submit Bids for the following on an ***urgent basis***

| LOT # | Description of Goods | Quantity | Delivery Location |
|---|---|---|---|
| 1 | Metal 1 ½" | 22.5 Cubes | |
| | Metal 1" | 57.5 Cubes | |
| | Metal ¾" | 35.0 Cubes | |
| | Rubble | 200.0 Cubes | |
| 2 | Planks 1 ¼" | 5,000 Sq.ft | |
| | Planks 1" | 4,850 Sq.ft | |
| | Shuttering planks | 5,150 Sq.ft | |
| 3 | Timber – Mahogani – 4"x3" | 14,500 L.ft | |
| | Timber - Class-I - 2"x1" | 55,000 L.ft | |
| | Timber - 5"x2" | 3,600 L.ft | |
| 4 | Steel – 10 mm | 2,000 bars | |
| | Steel – 06 mm | 18,500 L.ft | Kokkulai, Mullaitivu |
| | Lime | 1,750 kg | |
| | Hinges – 3x3 | 1,200 Nos | |
| | Hinges – 4x4 | 750 Nos | |
| | Barrel bolts – 6" | 250 Nos | |
| | Barrel bolts – 4" | 1,200 Nos | |
| | Wire Nails – 2" | 112.5 Kgs | |
| | Binding Wire | 62.5 Kgs | |
| | Drawl plugs and screws | 3,000 Nos | |
| | Enamel Paint | 200 Ltrs | |
| | Handle | 200 Nos | |
| | Lock | 200 Nos | |
| | Ring Handle | 1,200 Nos | |
| | Tar | 200 Ltrs | |
| | Wood Preservative | 1,800 Ltrs | |
| | Wood Primer | 100 Ltrs | |
| 5 | Coconut Ragfters – 4"x2" | 32,600 Lft | |
| | Wire Nails – 6" | 275 Kgs | |
| 6 | Timber – 5"x3" | 1,100 Lft | Kokkulai, Mullaitivu |
| | Timber – 6"x2" | 550 Lft | |
| 7 | Hard Earth | 100 Cubes | |
| | Sand | 475 Cubes | |
| 8 | Ridge Tiles | 3,450 Nos | |
| | Tiles | 60,500 Nos | |

The technical specifications, price schedule, delivery terms/conditions should be collected from the UNDP Field Office in Kilinochchi from 4th April to 12th April 2011. Any supplier who submits a bid without conforming to the bidding documents will be considered as technically noncompliant and the offer will be rejected. All bids must be clearly marked with (ITB/TRP/MUL/72383/06) on the top left corner of the envelope. The ***deadline*** for submission of the bids is 18th April 2011 2.00pm and all bids must be ***sealed*** and ***delivered*** to the addresses below. **All late** offers will be rejected and returned to the bidder unopened.

**Head of Office**
**UNDP**
**Kilinochchi/Mullaitivu**
**13C, Second Farm, Kanagapuram,**
**Kilinochchi**
**Vijayakumar.navaneethan@undp.org.**

(39)

## காணி விற்பனைக்குண்டு

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0777543682

## பாடசாலை மாணவர்களுக்கு
## ENGLISH CLASSES

(ஒரு மணித்தியால வகுப்புகள் - வாரத்தில் 3 நாள்கள்)

- O/L, A/L, Grade 10 மாணவர்களுக்கும், A/L முடித்து வீட்டிலிருப்போருக்கும்.
- Grammar (Exercise+Translation) - பிள்ளைகள் தாமாகவே வாக்கியங்களை அமைத்து, பேச, எழுத, பயிற்சியும் Dialogue உம்
- குறிப்பு:- மேலதிகமாக O/L, A/L மாணவர்களுக்கு Essay writing, Letter writing, Comprehension, Pastpaper Discussion உம், Grade 10 மாண்வர்களுக்கு Essay writing, Letter writing உம்.

வகுப்புகள் நடைபெறும் இடம்:-
42, Raja Veethy, Nallur.

Tel:- 0213215520, HP.0770229960

## தேவை

ஓய்வூதியர் இருவருள்ள வீடொன்றில் தங்கியிருந்து சமையல் வேலையுடன் வீட்டு வேலைகளும் செய்யக்கூடிய பொறுப்புணர்வு மிக்க நற்பண்புள்ள பெண் / ஆண் தேவை.

தொடர்பு: 0774374241

## Make your career with the no 01 sage Partner in Sri Lanka

We PERFECT BUSINESS SOLUTION SERVICES (PVT) LTD. is a leading business solution service provider and Business Partner of world leading Sage Software products in Sri Lanka, having branches in Maldives, Middle East, USA & Australia.

We look forward to recruiting a dynamic young personnel for our Jaffna Branch.

If you fit into the below criterion and posses a good command of English and Tamil with Interpersonal Skills and the right attitude, you can be a part of our winning team.

sage Evolution ERP Sage Peachtree sage 50 sage UBS

### Sales / Marketing Executive (Male)

Outgoing personality with a good communication and interpersonal skills, full or part qualification and work experience in sales and similar capacity will be an advantage.

06.04.2011 காலை 10.00 மணியில் இருந்து மதியம் 1.00 மணி வரை நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளதால் கீழ்காணும் முகவரிக்கு சமூகம் தரவும்.

Director
Perfect Business Solution Services (Pvt) Ltd.
No. 84, Small Bazar Road,
Jaffna.
Tel: + 94 772921040, + 94 772921046
Website: www.perfectbss.com

sage software Certified Consultant

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு அன்னமார் கோயிலுக்கு அருகில் தோட்டக் காணி நில.பர.28. உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
T.P. 0778696900, 0217911618

(2873)

## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை நிலையத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

நல்லீ சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(21.25.43)

## TILELAYING& PLUMBERING WORK
## ரைல்ஸ் அன் பிளம்பறிங் வேலை

சகலவிதமான ரைல்ஸ் (Tiles) (மாபிள்) பதியும் வேலைகளும், சகல விதமான பிளம்பறிங் (Plumbering) வேலைகளும் மிகவும் குறைந்த விலையில் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: ஜினசேன கொன்ரக்ரஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0718257096, 0717891134, 0776279225, 0771135322.

## வீடு விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெருவுக்கு அண்மையில் 639/4, நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0772267191.

## ஒத்துமாறல்

கொழும்பு மத்தியிலுள்ள பாடசாலைகளிலிருந்து யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு கலைப்பட்டதாரி, பயிற்றப்பட்ட விஞ்ஞானம் ஆகிய இரு ஆசிரியர்கள் ஒத்துமாற விரும்புகின்றனர்.

T.P: 0714980324

## சித்த வைத்தியம்

இடுப்புவலி, முதுகுவலி, வாதவலிகள், உடற் பலவீனம், பாலியல் பலவீனங்கள், தோல் நோய்கள், பெண்களுக்கு வெள்ளை படுதல், மாதவிலக் ஒழுங்கின்மை, மாதவி டாய்க் காலத்தில் ஏற்படும் வலி, இரத்தப்போக்கு, மூலவருத்தம், நீரிழிவு, முடி கொட்டுதல், இரத்த சுத்தியின்மை, மலட்டுத் தன்மை ஆகியவற்றுக்கு உயிர்காக்கும் மூலிகைகளினால் சிறப்புச்சிகிச்சை பெறத் தொடர்பு கொள்ளவும்.

Dr.T.Krishnapahavan
R.I.M.P, LDHI (Spain), T.M (Germany)
No.27/1, Kalaimagal Veethy,
Ariyalai, Jaffna. SriLanka

Mobile: 0779723369.
E-Mail:- thambippilai@yahoo.com

## A/L பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியடைந்துள்ளீர்களா?

மூன்று வருடங்களில் நீங்களும் ஒரு பட்டதாரியாகலாம்

External Degree — South Eastern University of Sri Lanka

# BBA, B.Com & BA

Bachelor of Business Administration, Bachelor of Commerce, Bachelor of Arts

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில்

விரிவுரைகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் சனி அல்லது ஞாயிறு தினத்தில் நடைபெறும்

KANDY - KURUNEGALA - HATTON - NUWARA ELIYA- BANDARAWELA - BERUWELA - VAVUNIYA - TRINCOMALEE

ஆகிய கற்கை நிலையங்களில் பாடநெறியைத் தொடரலாம்

03 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வெளிவாரிப்பட்டப்படிப்பைத் தொடர்வதற்கான
இறுதி சந்தர்ப்பம் இவ்வருடம் மட்டுமே!
பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்


அனைத்து கற்கை நிலையங்களுக்குமான பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

FOR DETAILS 0777 71 71 29 0718 ...

## GOLDEN COLLEGE

No.23, Suduhumpola Road, Kandy. Tel: 081 2205544 / 0777 912597

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 04.03.2011 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தாயார்

### திருமதி பரமசாமி செல்லம்மா

அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மலர்வளையம் வைத்தவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மேலும் பல வழிகளில் எங்கள் துயரில் பங்குகொண்டவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

(48,26,25)

கணபதி அரிசி ஆலை,
மீசாலை கிழக்கு, மீசாலை. தொ.பே: 0750468092

மகன் - ஸ்ரீதரன்

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் கவனத்துக்கு

தென்மராட்சி, ஏப்.3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக உள்வாங்குவதற்கான பரீட்சைகளில் தோற்றிய அனைவரையும் வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளரை நாளையும் 6ஆம் திகதி புதன்கிழமையும் சந்திக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை, கல்வித் தகைமைச்சான்றிதழ்கள் ஆகியவற்றின் மூலப் பிரதிகளுடன் இருபுகைப் படப் பிரதிகளையும் பணிப்பாளரைச் சந்திக்க வரும்போது கொண்டு வருமாறு அறிவித்துள்ளார்.

(எ-207)

## செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 3

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.43, 3 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கட்சிப் பணிமனையில் நடைபெறவுள்ளது என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிர்வாக செயலாளர் க.தங்கராஜ்சிங்கம் அறிவித்துள்ளார்.

(ற)

## குரும்பசிட்டி
## அருள்மிகு முத்துமாரி அம்பாள் பிரதிஷ்டை விஞ்ஞாபனம்

காலம்: 04.04.2011 திங்கட்கிழமை
நேரம்: மதியம் 12 மணி

பிரதிஷ்டா பிரதம குரு
**சி.கிருபாகரக் குருக்கள்**
[திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலயப் பிரதமகுரு]

காலையில் பூசையும் பங்குனித் திங்கள் மூன்றாவது பொங்கல் நிகழ்வும் நடைபெறும். நிகழ்வுகளில் அம்பாள் அடியார்கள் பங்குகொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சிறப்பு நிகழ்வு**
பிற்பகல் : 3.30 மணி

தலைமை :
திரு. எஸ். முரளீதரன் அவர்கள்
[பிரதேச செயலர், வலி.வடக்கு]

விருந்தினர்கள்:
திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்
(அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்)
மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்ஹ அவர்கள்
[பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதி, யாழ்ப்பாணம்]
திருமதி மதுமதி வசந்தகுமார் அவர்கள்
[பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்]
திரு.வி.கேசவன் அவர்கள்
[பணிப்பாளர், சேவாலங்கா நிறுவனம்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குரும்பசிட்டி தெல்லிப்பழை — குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்.

[21.25.43]

## அன்பொளி கத்தோலிக்க தமிழ் திருப்பலி

[24 மணி நேர ஒளிபரப்பு]

www.anbolitv.org எனும் இணையத்தளத்தில் கத்தோலிக்க தமிழ் திருப்பலி தினமும் இந்திய நேரப்படி காலை 6 மணிக்கும் மாலை 6 மணிக்கும் பாண்டிச்சேரி திரு இருதய ஆண்டவர் தேவாலயத்திலிருந்து நேரடி ஒளிபரப்புச் செய்யப்படுகின்றது.

மேற்கூறிய இணையத்தளத்தில் anbolitv live எனும் தலைப்புக்குக் கீழ் காணப்படும் video1 அல்லது video2ஐத் தெரிவு செய்வதன் மூலம் பார்வையிடலாம். video1 ஒலிபரப்பு தடைப்படின் video2 இல் பார்வையிடலாம். திருப்பலி மற்றும் நத்தார், தவக்கால விசேட பிரார்த்தனைகளையும் நீங்கள் பார்வையிடலாம். மேலும் www. arulosai.org இல் ஒளிப்பதிவு செய்யப்பட்ட, சனிக்கிழமை திருப்பலி எந்நேரமும் ஒளிபரப்பாகின்றது. அத்துடன், ஆங்கிலத்தில் மதிய நேரத்திலும் திருப்பலியைப் பார்வையிடலாம். விசேட தினங்களில் பாப்பரசரின் திருப்பலிப் பூசையையும் மேற்படி இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

குறிப்பு:- வெள்ளிக்கிழமை சிலுவைப்பாதை காலை 5.30 மணிக்கு ஒளிபரப்பாகும்

தகவல்:
அ.மரியநேசன்.

(c/577316) (41, 19,25)

# கேள்விக்கு உள்ளாகும் ஜனநாயகம்

**ஞாயிறு காரம்**

தோலிருக்கச் சுளை விழுங்குவது'' என்றொரு சொற்றொடர் தமிழில் உண்டு. இன்று இலங்கை அரசியலில் இடம்பெறும் பல சம்பவங்கள் இதை அடிக்கடி நினைவூட்டும் வகையிலேயே இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் உள்ளூராட்சிச் சபைகளுக்கு இடம்பெற்ற தேர்தலில் மிகப் பெரும்பான்மையான இடங்களை ஆளும் கட்சியே கைப்பற்றியது. இலங்கையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினால் 9 இடங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குக் கிழக்கில் 12 சபைகளைக் கைப்பற்றிக் கொண்டது. ஜே.வி.பியாலோ தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளாலோ ஒரு சபையைக் கூடக் கைப்பற்ற முடியவில்லை.

மிகுதியான ஆசனங்கள் அனைத்தும் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாலும் அதனுடன் இணைந்து ஆட்சியில் பங்குவகிக்கும் கட்சிகளாலும் கைப்பற்றப்பட்டுவிட்டன.

எனினும், தேர்தல் முடிந்து முடிவுகள் வெளியாகி இன்னும் சபைகள் உருவாக்கப்படும் முன்பே இந்தச் சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் ஒரு முக்கிய சட்ட மூலம் கொண்டு வரப்படவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் மக்கள் சபைகள் அமைக்கப்படும் எனவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் மேற்கொள்ளும் எந்த ஓர் அபிவிருத்தித் திட்டமும் இந்தச் சபையின் அங்கீகாரம் பெற்றே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல், வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்தல், நிதி சம்பந்தப்பட்ட மத்திய அரசுடனான தொடர்புகள் என்பனவற்றை இந்தச் சபைகளே மேற்கொள்ளும். ஒவ்வொரு மக்கள் சபையும் மூன்று அல்லது நான்கு உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கியிருக்கும் எனவும், இதன் தலைவராக ஏதாவது ஒரு சபையைச் சேர்ந்த உறுப்பினரும் ஏனைய அங்கத்தவர்களாகப் பாடசாலை அதிபர்கள், சமயப் பெரியார் கள், சமூக சேவை ஆர்வலர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்த மக்கள் சபைகள் நேரடியாகவே பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலேயே இயங்கும்.

அதாவது, அபிவிருத்தி தொடர்பான மாகாண சபைகள், உள்ளூராட்சிச் சபைகள் என்பனவற்றின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு இந்தச் சபைகளிடமே வழங்கப்படும்.

தெளிவான வார்த்தைகளில் சொல்லப் போனால், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் என்பன சோலை வரி, சந்தை வரி போன்ற வரி அறவீடுகளை மேற்கொண்டு பெறும் நிதியை நிர்வகித்துச் செலவிடும் அதிகாரம் இந்த மக்கள் சபைக்கே போய்ச்சேரும்.

மக்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்கள் சபையின் சேவகர்களாகவும் 'சொன்னதைச் செய்யும் சுப்பர்களாகவும்' மாற்றப்படும் நிலையே உருவாகும். தமது மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு, அவற்றை நிறைவேற்றும் அதிகாரம் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிடும்.

இங்குதான் ஜனநாயகமும் ஜனநாயக மரபுகளும் பரிதாபகரமான முறையில் கேள்விக்குள்ளாகப்படுகின்றன. மாகாண சபைகளும் உள்ளூராட்சிச் சபைகளும் வெறுமனே கூடிக் கலையும் பேச்சுமேடைகளாக மட்டுமே மாற்றமடையப் போகின்றன.

மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதும் மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்தும் சட்டங்களை உருவாக்குவதும் இப்போதுதான் இடம்பெறுகின்றன என்று சொல்லிவிடமுடியாது.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அமுலுக்கு வந்தபோதே நாடாளுமன்றத்தின் அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டது. ஆணைப் பெண்ணாக மாற்றுவதையும் பெண்ணை ஆணாக மாற்றுவதையும் விட அனைத்தையும் செய்யும் அதிகாரம் தன்னிடமுண்டு என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா சவால் விடுமளவுக்கு அந்த முறை மூலம் அதிகாரங்கள் ஒரு தனிநபரிடம் குவிக்கப்பட்டன.

நாடாளுமன்றம் பெரும்பான்மையுடன் நிறைவேற்றும் அதிகாரத்தைக் கூட இரத்துச் செய்யும் அதிகாரம் அவரிடம் உண்டு. முப்படைகளின் உத்தியோகபூர்வமான தளபதியும் ஜனாதிபதியே என்பதும் ஒரு முக்கிய விடயமாகும்.

திருமதி சந்திரிகா விஜயகுமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது தனது கட்சிக்கு நாடாளுமன்றப் பலம் இல்லாத நிலையில் மூன்று மாதங்கள் நாடாளுமன்றத்தைக் கூட்டாமல் இருந்ததையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்றபோது அவர் அதைக் குழப்பும் வகையில் பாதுகாப்பு அமைச்சையும் ஊடகத்துறை அமைச்சையும் ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து பறித்தெடுத்தமையையும் நாம் இங்கு நினைவு கூரலாம்.

அதாவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அமுலுக்கு வந்தபோதே ஜனநாயகத்தின் முதுகெலும்பு எனச் சொல்லப்படும் நாடாளுமன்றத்தின் அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டது.

மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்பு இத்தகைய அதிகாரக் குவிப்பு மேலும் வலிமையாக்கப்பட்டுவிட்டது. நாட்டின் முழு அதிகாரமும் ராஜபக்ஷ குடும்பத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விட்ட நிலையே உருவாகியுள்ளது.

இன்று அரச போக்குவரத்துக்கு ஓர் அமைச்சர், தனியார் போக்குவரத்துக்கு ஓர் அமைச்சர், கைத்தொழில் அபிவிருத்திக்கு ஓர் அமைச்சர், பாரம்பரிய கைத்தொழிலுக்கு ஓர் அமைச்சர், கல்விக்கு ஓர் அமைச்சர், உயர் கல்விக்கு ஓர் அமைச்சர் என்ற வகையில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் தொகை நூறை எட்டித் தொடுமளவுக்கு அதிகரித்துவிட்டன. இவர்களுக்கான ஊதியம், செயலகங்கள், வாகனங்கள், பாதுகாப்பு என்பன போன்ற செலவினங்கள் அனைத்துமே மக்களின் பணத்தில் வழங்கப்படுகிறன.

இதில் பாதுகாப்பு, நிதி ஆகிய இரு அமைச்சுகளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும் பொருளாதார அபிவிருத்தி பஸில் ராஜபக்ஷவிடமும் உள்ளன. நாட்டின் நிதியில் அறுபது வீதத்துக்கு மேற்பட்ட தொகையை இந்த மூன்று அமைச்சுகளுமே கையாள்கின்றன. ஏனைய வீதமே கல்வி, சுகாதாரம், விவசாயம் உட்பட்ட ஏனைய அமைச்சுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், பாதுகாப்புச் செயலராகக் கோத்தபாய ராஜபக்ஷவும் சபாநாயகராகச் சமல் ராஜபக்ஷவும் பதவி வகிக்கின்றனர்.

**சந்திரசேகர ஆசாத்**

அதாவது, நாட்டின் நிதி கையாள்கையில் பெரும் பகுதியும் அதிகாரம் முழுமையாகவும் ஒரு குடும்பத்தின் கைகளுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமை நன்கு தெளிவாகிறது.

இந்த அதிகாரங்களை மேலும் மேலும் வலுப்படுத்தும் வகையிலும் சகல அதிகாரங்களையும் ஒரு குடும்பத்தின் கைகளில் குவிக்கும் வகையிலும் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பாவித்து சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சிச் சபைகள் என்பனவற்றின் அதிகாரங்கள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தின் 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளின் பொலிஸ், பொதுநிர்வாக அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன. மேலும், ஜனாதிபதி இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியும் என்ற நிலையும் உருவாக்கப்பட்டது. உள்ளூராட்சிச் சபைகள் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு உள்ளூராட்சி சபைகள் மீதான அதிகாரம் பறிக்கப்பட்டது. இனிக் கொண்டுவரப்படவுள்ள மக்கள் சபைச் சட்டத்தின் மூலம் மாகாணசபைகள், உள்ளூராட்சிச் சபைகளின் அபிவிருத்தி தொடர்பான் அதிகாரங்கள் பறிக்கப்படவிருக்கின்றன.

இங்கு நிலவும் ஒரு பெரும் முரண்நிலையை நாம் அவதானிக்க வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமே மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பனவற்றின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு வருகின்றன. இதிலிருந்து எவ்வாறு ஒரு குடும்பம் முழுநாட்டையுமே தம்மைப் பலப்படுத்தும் வகையில் கட்டுப்படுத்துகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

இப்படியான ஒரு குடும்ப சர்வாதிகாரத்தை நோக்கி ஜனநாயத்தின் பேரால் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் கிடைக்கும் வகையிலான ஓர் அதிகாரப் பரவலாக்கலை எதிர்பார்க்கிறது. அதற்கமைவாகவே அவர்களின் கோரிக்கைகள் அமையும்.

ஆனால், அரசோ அதிகாரங்களை மேலும் மேலும் கையகப்படுத்தும் போக்கையே கடைப்பிடிப்பதுடன் மாகாண சபைகள், உள்ளூராட்சிச் சபைகள் போன்ற அதிகாரப் பரவலாக்கல் அலகுகளில் இருக்கும் குறைந்தபட்ச அதிகாரங்களையும் பறிக்கிறது.

எனவே, அரச அதிகாரப் பீடத்தின் நோக்கமும் தமிழ் மக்களின் கோரிக்கைகளும் ஒன்றுடன் ஒன்று முரண்படும் நிலைமையையே காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால், போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகச் சர்வதேசம் கொடுக்கும் அழுத்தங்கள் இலங்கை அரசை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன. இவற்றைத் திசை திருப்பவும், இவற்றிலிருந்து தப்பவும் அரசு இந்தப் பேச்சுக்களைக் கவசமாகப் பாவிக்க முனைகிறது.

இதைத் தமிழர் தரப்பு நன்றாகவே புரிந்துகொள்ள வேண்டும். இந்த நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி, எமது கோரிக்கைகளில் உறுதியும் விடாப்பிடியான தன்மையும் கொண்டிருக்க வேண்டும். பேச்சுக்களை வெளிப்படையாக நடத்தும் போது இனவாதிகளின் பலத்த எதிர்ப்பு எழும். இதற்கு அரசே பதிலளிக்க வேண்டிய நிலையும், தன்னை நியாயப்படுத்த வேண்டிய நிலையும் ஏற்படும். இது எமக்கு ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்தும். இதில் எமது உறுதியும் வெளிப்படைத் தன்மையுமே முக்கியமானதாகும்.

மாகாண, உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரங்களைப் பறிப்பது தொடர் பாகச் சிங்கள - முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒரு பரந்த எதிர்ப்பலையை உருவாக்கும் வாய்ப்பு உண்டு.

அதை எப்படி சிங்கள - முஸ்லிம் தரப்புக்கள் கையாளப் போகின்றன என்பதும் ஒரு முக்கியமான விடயமாகும்.

எனவே, மக்கள் சபைச் சட்ட மூலத்துக்கு எதிரான பரந்த ஓர் எதிர்ப்பலையை உருவாக்குவதில் தமிழர் தரப்புக்குள்ள கடப்பாடு உணரப்படாவிட்டால் நாம் மீண்டுமொரு சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட பழிக்கு ஆளாக வேண்டிவரும்.

✱

## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் இராசன் குணரத்தினம்

மலர்வு 10.02.1943

உதிர்வு 24.01.2011

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்ற
எம் அன்புத் தெய்வமே! உங்கள்
நினைவுகள்
என்றுமே எம்மை விட்டுப் பிரியாதையா:
ஆறாதையா எம் துயரம்.

கடந்த 24.01.2011 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜவீதி, சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
மகன்மார்.

## மரண அறிவித்தல்

### *நாகேந்திரம் சிவகுருநாதன்* (செட்டியார்)



சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் சிவகுருநாதன் (செட்டியார்) நேற்று (02.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற றேணுகாதேவியின் அன்புக் கணவரும் கோமதி, பிரதீபன் (சுவிஸ்), விஜயதீபன் (2ஆம் வருட மாணவன், விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), விஜயசோபனா (மாணவி, மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்வண்ணனின் (கம்ஷா களஞ்சியம்) மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், நடராசா மற்றும் இராசா (கனடா), இராசலட்சுமி, நவரத்தினம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், மஸ்கன்ஸ் கம்பனி), காலஞ்சென்ற கணேசராஜா (இளைப்பாறிய அதிபர், யா/சதானந்த வித்தியாலயம், அளவெட்டி) மற்றும் செல்லம்மா, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமேஸ்வரி, திரவியம், தவமணி, நவரத்தினம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), சோதிராணி, விக்கினேஸ்வரி, இராசரத்தினம் (இளைப்பாறிய கணக்காளர், மானிப்பாய் ப.நோ. கூ.சங்கம்), சச்சிதானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கம்சாளினி, தரணிகா, பிருந்தா ஆகியோரின் பேரனும் மணிவண்ணன் (சிரேஷ்டம நிறைவேற்று உதவி பொறியியலாளர், சிறிலங்கா ரெலிக்கொம், திருகோணமலை), ரவிவண்ணன் (ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), மணிமாலா (ஆசிரியர், யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), கமலவண்ணன் (N.R.K. தொழிலதிபர்), அருள்வண்ணன், கலாஜோதி (ஆசிரியை, யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), தவக்குமார் (சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவஜோதி (ஆசிரியை, யா/கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்), பாலகுமார், சிவகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன திணைக்களம், முத்துஐயன்கட்டு), தனுஷா (மாணவி), கனகேஸ்வரி, தர்சினி, சதானந்தன், ஜீவானந்தன், விஜிதா, பிறேமானந்தன் ஆகியோரின் மாமனாரும் சாந்தினி, இராசமலர், சுரேஸ்குமார், ஸ்ரீதரன், வசந்தா, விசஜா, சிவகுமார், செல்வக்குமார், சுகந்தி, பாமா,கண்ணா, சந்திரமோகன் (வர்த்தகர்), இந்திரமோகன் (மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்), நிர்மலவதனி (ஜேர்மனி), நிர்மலராஜன், நிர்மலகஜன் (இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்), நிர்மலகஜனி ஆகியோரின் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் மேற்கு,*
*சண்டிலிப்பாய்.*

தகவல்: குடும்பத்தினர்.
T.P.: 021 2255172

## கட்டாக்காலிகளால் சிறுதானிய செய்கை பாதிப்பு

கட்டாக்காலி கால்நடைகளால் வரணிப் பிரதேசத்தில் சிறுதானியப் பயிர்ச் செய்கை பாதிக்கப்படுவதாக வரணி சவனாவெளி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெல் அறுவடையின் பின்பு இப்பிரதேச வயல் நிலங்களில் சிறு தானியப் பயிர்களை இவர்கள் பயிரிட்டிருந்தனர். இருந்தும் கட்டாக்காலி கால்நடைகள் தினமும் பயிர்களை அழித்து சேதம் விளைவிப்பதாக விவசாயி ஒருவர் கவலை தெரிவித்தார்.

பட்டிமாடுகளை மேய்ப்போர் தமது கால் நடைகளை கட்டுப்பாடு இல்லாமல் மேய விடுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச விவசாய அமைப்புக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தி உதவிட வேண்டும் என விவசாயிகள் கோருகின்றனர். (ஐ-122)


## காணவில்லை

மாட்டின் நிறம் கறுப்பு. பெயர்க்குறி இல்லை. இலக்கக்குறி உள்ளது. இலக்கம் 96. அரை அடி நீளமான வளைந்த கொம்புகள். பெரிய இனமாடு. நான்கு முலைகளில் ஒன்று செயலிழந்தது. தூவாரம் போன்ற வடு முலையில் உள்ளது. கன்று கறுப்பு நிறம். குறி எதுவும் இல்லை [அபகரித்தவர்கள் குறி வைத்திருக்கலாம்]. கன்றின் வயது 6 மாதம். தகவல் தருவோருக்கு ரூபா 5000 சன்மானம் வழங்கப்படும். காணாமல் போன காலம் மூன்று மாதங்கள் வரையில்.

தகவல் தரும் முகவரி: துயிலன் புத்தகசாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

## தவறிவிட்டது

சுந்தரம்பிள்ளை சிவகுமாரன் சிவகுமார் எனது தேசிய அடையாள அட்டை இல. 751534221V, I.O.M. IC இல. VS.000999, HNB வங்கியில் ஒரு காப்பு அடைவு வைத்த றிசீற்றும் சிறிய தொகை பணமும் வட்டக்கச்சி தபால்பெட்டி சந்திக்கும் ஆறுமுகம் உள் வீதிக்கும் இடையில் 29.03.2011 அன்று மாலை தவறவிடப்பட்டுள்ளது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவுமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். தந்துதவுவோருக்கு சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
வட்டக்கச்சி சந்தை அருகில் உள்ள வைகுந்தப் பெருமாள் பல்பொருள் வாணிபம்
தொ.பே.: 0775761498, 0243247867

## கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள 19 XXXX தொடரிலக்கமுடைய TOYOTA CORROLLA கார், FUll option, A/C, center Lock, மாத்தளையில் பார்வையிடலாம்.

தொடர்பு:-0773465528, (சிங்களத்தில் உரையாடவும்)

## வீடு வாடகைக்கு

34/2, சேர் பொன். இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 0716277218

## PERSONAL CLASS MATHEMATICS

★English medium
★தமிழ்மொழி மூலம்
} Grade 6 to O/L
★O/L Day Class
T.P: 0776253876

## பணியாளர் தேவை

பருத்தித்துறை, தும்பளை வீதியில் இயங்கும் FAST FOOD RESTAURENT இற்கு கீழ் வரும் அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை.

1. காசாளர் (பெண்)
2. வெயிட்டர்
3. சமையல் உதவியாளர்

தொடர்புகளுக்கு: 0773146059


## பிறந்தநாள் நினைவலைகள்

*மலர்வு*
*1975*
★
*04*
★
*03*



*உதிர்வு*
*2009*
★
*05*
★
*18*

### வில்பிரட் மேரி லூர்ட்ஸ் (ஜஸ்மின்)

*என் வாழ்வில் இரண்டற கலந்த என் உயிரே*
*இடைவழியில் எனைவிட்டு பிரிந்து சென்றதேனோ?*
*வாழ்ந்த காலம் கொஞ்சம் என்றாலும்*
*என் வாழ்வின் அர்த்தம் நீயே*
*ஆண்டிரண்டு உருண்டோடினும்*
*ஆறாது என் துயரம்.*

இல.15,சுவாட்ஸ் வீதி, சுண்டுக்குளி.

தகவல்: வில்பிரட்(நிமால்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### நாகமுத்து இராசா

(மாலியவத்தை, சங்கானை)

பிறப்பு:
*16.10.1945*

இறப்பு:
*15.03.2010*

திதி: 03.04.2011

அப்பா! ஆண்டொன்று ஆனதப்பா
அன்பான உன்திருமுகம் பார்த்து
கனிவான உன் வாய்மொழி கேட்டு
கலங்கி அழுது கண்ணீர் சிந்துகின்றோம்
வெந்து புலம்பி வேதனைப்படுகின்றோம்
நினைக்கும் நேரத்தில் நெருஞ்சி முள்ளொன்று
நெஞ்சைக்குத்தி ரணப்படுத்துகின்றதே
சங்கானையில் வந்துதித்த வள்ளலே
ஊர்த் தலைவனாய், உயிர்காக்கும்
தோழனாய்
பண்பான மனிதனாய் பாசமான அப்பாவாய்
உன்னையே நினைத்து உருகி நிற்கும்
உன் தயவை வேண்டி நிற்கின்றோம்.

*மாலியவத்தை,*
*சங்கானை.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

(2939)(31)

## மரண அறிவித்தல்

### *வீரகத்தி சின்னத்தம்பி (இராசதுரை)*

(ஓய்வுபெற்ற விற்பனைத் திணைக்கள முகாமையாளர்)



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோவிலடி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சின்னத்தம்பி நேற்றுமுன்தினம் (01.04.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானமலரின் அன்புக் கணவரும், பிரபாகரன் (E.U.T உத்தியோகத்தர்), ஹரிகரன், அம்பிகைபாலகரன் (நியூ மல்ரி சென்ரர், சாவகச்சேரி), துஸ்யந்தி, தமயந்தி (உதவி நிர்வாக உத்தியோகத்தர் M.H.S ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராகினி, சிவசாந்தினி (ஆசிரியை, மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாளர்), பிறேம்குமார் ஆகியோரின் மாமனாரும், றஜீவன், கீர்த்தனா, பர்மிலா, யதுர்சன், சாருஷன், சாரண்யா, பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தெய்வானை, செல்லம்மா மற்றும் வைரமுத்து (கனடா), இராசமணி, பூரணம், சின்னம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயனார் கோயிலடி,*
*சுன்னாகம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## வட மாகாண மாணவர்களுக்கு

**LONDON இல் கல்வி கற்க அரிய சந்தர்ப்பம்.**

## FOUNDATION CAMPUS - IN UK

**LONDON SOUTH BANK UNIVERSITY OFFERING ONE YEAR FOUNDATION CAMPUS FOR UNSUCCESSFUL A/L STUDENTS TO GUARANTEED PROGRESSION TO UNDERGRADUATE COURSES**

**Students only need to complete 12 years of schooling with GOOD GRADES at O/Level for guaranteed progression to University - Undergraduate Courses.**

- One Year UK Visa guaranteed for Foundation Campus
- Another 3 years Visa when progressing into Undergraduate Programme
- We offer FREE VISA COUNSELLING
- Our VISA SUCCESS RATE 100% in 2009 and 2010

CONTACT: MR. JEYA ON - 0777-318582 / 2364266 OR MS. ZEENA ON - 0777-652090 / 2364266

LSBU Representative Office,

"Lotus Grove", 248/186, Hill Street. (Off Captain Sumuthu Rajapakse Mawatha), Dehiwala, Sri Lanka.

E'mail : jeyacosl@yahoo.com / jeyaco@yahoo.com

Website : www.lsbu.ac.uk

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தை நாம் தமிழர் கட்சி ஏற் பாடு செய்திருந்தது.

தமிழ்நாட்டு மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் படுகொலை செய் யப்படுகிறார்கள் என்று தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இலங்கை அதிபரின் உருவப்படங்களை வீதிகளில் போட்டு எரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

''சிறிலங்கா கடற்படையால் எமது மீனவர்கள் பலர் நடுக்கடலில் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு இடம்கொடுக்க முடியாது. இந்திய அரசாங்கம் கூட இதை ஒரு பாரதூரமான விடயமாக கருத வில்லை. இதனால் மகிந்த ராஜபக்சவுக்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அவரது உருவப்படங்களை தீயிட்டு எரித்தோம்'' என்று ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் தெரிவித்தார். (உ)

## அந்தியேட்டி அழைப்பு

### திருமதி சற்குணதேவி செல்லத்துரை



கடந்த 05.03.2011 அன்று இறை வனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் திருமதி சற்குணதேவி செல்லத்துரை அவர்களின் அந்தியேட்டிக்கிரியை நாளை (04.04.2011) திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

குறிப்பு:-இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப் பாக ஏற்றுக்கொள்ளவும்.

துவாளி வீதி,
இமையாணண் மேற்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.
T.P. 0212263362,
0778506586

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகமுத்தன் இலட்சுமி



கைதடி மத்தி, வளர்மதி வீதியைப் பிறப்பிடமாகவும் கைதடி, கலைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகமுத்தன் இலட்சுமி நேற்று (02.04.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார்காலஞ்சென்றசுணையன்நாகமுத்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னியின் அருமைச் சகோதரியும் கந்தசாமி (சுவிஸ்), இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, புஸ்பராணி, செல்வராணி, காலஞ்சென்ற ஞானேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயும் பூபதி (சுவிஸ்), திரவியம், மனோகரன், சற்குணராசா, சிறீதரன், காலஞ்சென்ற கோடீஸ்வரன் ஆகியோரின் அருமை மாமியும் சாருஜன் (சுவிஸ்), சாருஜா (சுவிஸ்), கௌசலாதேவி, சுசித்திராதேவி, சுவந்தினிதேவி, சதீஸ்ராஜன் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சதீஸ் குமார், சதீஸ்வரன் மற்றும் கேதீஸ்வரன் (சுவிஸ்), கேதீஸ்வரி, ரஜித்தா, சிந்துஜா, சிந்துஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலைநகர், கைதடி
நா.கந்தசாமி (சுவிஸ்).

### பெரியான் சின்னையா



கருகம்பன், மந்திகையைப் பிறப்பிடமாகவும், கேயா ஓடை, புலோலி மேற்கை வதிவிடமாகவும் கொண்டவரும் வைத்தீஸ்வரர் (சிவன் ஆலயம் - கேயாஓடை) ஆலய அறங்காவலருமான பெரியான் சின்னையா 01.04.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி மற்றும் பரமேஸ்வரி, கருணாகரன், இராஜேஸ்வரி, சிவனேஸ்வரி (ஆதார வைத் தியசாலை ஊழியர் - மந்திகை) ஆகியோரின் அன்புத் தந்தை யும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் புஸ்பலதா, கந்தகுமார், சசிகலா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2011) திங்கட் கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேயாஓடை, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
தகவல்: குடும்பத்தினர்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்று குற்றஞ்சாட்டி உள்ளது சிவசேனா கட்சி.

இந்தியாவின் இந்தச் செயலை ''புதுடில்லியின் இராஜதந்திரச் சறுக்கல்'' எனக் கடுமையாக விமர்சித்துள்ளார் சிவசேனாவின் தலைவர் பால் தக்கரே.

'துடுப்பாட்ட இராஜதந்திரம்' என்கிற சிறப்புச் சலுகை என ஒன்றிருந்தால், அதை இலங்கைக்கும் இந்தியா பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

''மன்மோகன் சிங்கின் இந்தத் துடுப்பாட்ட இராஜதந்திரம் முட்டாள்த்தனமானது. இறுதி ஆட்டத்தைக் காண இலங்கை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு அழைப்பு அனுப்பட்டிருந்தால் பரவாயில்லை. ஜனாதிபதி மஹிந்த இந்தப் போட்டியைக் காண மும்பை வருவதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிந்தது. அவருக்கு அதிகாரபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டதா? அப்படி அதிகாரபூர்வ அழைப்பு விடுக்கப்படாது போனால் இந்தத் துடுப்பாட்ட இராஜதந்திரம் பாகிஸ்தானுக்கு மட்டும்தானா? '' என்று கேள்வி எழுப்பினார் பால் தாக்கரே.

''இலங்கையில் உள்ள தமிழர்கள் ஏராளமான பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளனர். பாகிஸ்தானுடன் நட்புறவு கொள்ள பயன்படுத்திய கிரிக்கெட் இராஜதந்திரத்தை, இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தியா ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?'' என்றும் சிவசேனா தலைவர் பால் தாக்கரே தெரிவித்தார்.

உலகக்கிண்ணப் போட்டிக்கு ஜனாதிபதி மஹிந்த அழையா விருந்தாளியாகவே சென்றுள்ளார் என்பது சிவசேனா தலைவரின் கூற்று மூலம் தெளிவாகிறது.

ஆயினும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்த அறிக்கை ஒன்றில், சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பின் பேரிலேயே மஹிந்த மும்பை செல்கிறார் என்று கூறப்பட்டிருந்தது.

ஆனாலும் யாரால் அந்த அழைப்பு அனுப்பப்பட்டது என்ற தகவல் அந்த அறிக்கையில் இடம்பெறவில்லை.

இலங்கை அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற முன்னரே இலங்கை அதிபர் செயலகம், மும்பைப் போட்டியின் போது சிறப்பு அழைப்பாளர்களுக்கான பிரிவில் 30 ஆசனங்களை ஒதுக்கித் தருமாறு சரத் பவாரிடம் கோரியிருந்தது என்று மும்மைபச் செய்திகள் கூறுகின்றன. (உ)

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் சிவபாக்கியம்



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிவபாக்கியம் (02.04.2011) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக துண்டி கொழும்புத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M.சிறி, M.உமாசுதன்
(மகன்)
கடல் உணவு வியாபாரி.

80/2, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை.

### திருமதி செல்லத்துரை நாகரத்தினம்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செ.நாகரத்தினம் 01.04.2011 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பொ.செல்லத்துரையின் (சமாதான நீதிவான், ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்)அன்பு மனைவியும், திருமதி ம.கௌரி(இறப்பு, பிறப்பு பதிவாளர், அச்சுவேலி) திருமதி த.தமிழ்ச் செல்வி(ஆசிரியை, யா/சண்டிலிப்பாய் அ.த.க பாடசாலை) அகிலன்(ஆசிரியர், அருணோதயக் கல்லூரி), அனுசீலன் (U.K), ஆகியோரின் அன்புத் தாயாரும், நா.மதனசேகர்(கிராம உத்தியோகத்தர்), திருமதி அ.சதீஸ்வரி (ஆசிரியை, வ/மறவன் குளம் பாரதிதாசன் வித்தியலயம்) ஆகியேரின் பாசமிகு மாமியாரும், திருமதி றொ.அரிச்சிகா, ம.அபிசேக், ம.ஆர்த்திகா, த.சுரபிகா, ஆகியோரின் அம்மம்மாவும் றொ.மிலாறாவின் பூட்டியும் ஆவார்.

இவரது பூதவுடல் நேற்று (02.04.2011) சனிக்கிழமை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-கணவர்
பொ.செல்லத்துரை
மகன் செ.அகிலன்.

## இரண்டாம் ஆண்டு நினைவாக



அமரர்
### இராசன் வெற்றிவேல்

பிறப்பு 26.12.1955
இறப்பு 26.03.2009

மண்ணின் மைந்தனாக இராசன் வெற்றிவேல்
மண்ணில் மடிந்த வேளை தவமணி வெற்றிவேல்
கண்ணில் தெரியுதையா நீங்கள் சிந்திய வியர்வை
உங்கள் கையில் நாம் குழந்தையாய் இருந்த போது
வெய்யில் மழை என்று பாராது எம்
பசி போக்க எமக்காக உழைத்தீரே
வாழ்க்கையில் பல வெற்றிகளை பெற்றீரே
இருந்தும் உங்கள் தேகத்தில் வந்த நோயை
எம்மால் வெற்றி கொள்ள முடியாமல் போயிற்றே
நீங்கள் தான் எங்கள் தெய்வம்
எம் கோயில் நீங்கள் எப்போதும் சாமிதான்
உங்கள் பிரிவால் வாடுகிறோம்- நாம்

செட்டித்தறை சித்திவிநாயகர் கோவிலடி,
கொற்றாவத்தை.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### வேலு இராமநாதன் (சோதி)



தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலு இராமநாதன் (சோதி)(31.03.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலு - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகா- பொன்னி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லமணியின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார், காலஞ்சென்றவர்களான பிறேமகுமார், கிசோக்குமார் மற்றும் சர்மிலா, யசோக்குமார், மிதிலா, மிதிலகுமார், யமிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மஞ்சுளா, ஜெகதீஸ்வரராஜா(ஜெகன்), நளினிகாந்(காந்தன்) ஆகியோரின் அன்பு மாமனும் குயின்ஷா, திரிஷாலினி, டினோஜா, பவிஷன், தரன்கா, அனுஸ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னம்மா, முருகையா, (சொக்கர்), பாலசிங்கம், புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வைரமுத்து மற்றும் செல்லமணி, இராசையா, காலஞ்சென்ற சந்திரா மற்றும் மகேஸ்வரி, கந்தசாமி, செல்லத்துரை, இராசமணி, செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் புஸ்பராணி, செல்வதேவி, நாகராசா, இராஜேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04. 2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக தொந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை. தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி கனகம்மா நடராஜா



[ஓய்வுபெற்ற ஆசிரியை மெம்மோரியல் ஆங்கில பாடசாலை முன்னாள் பிரதி அதிபர் சென்ற் RC பாடசாலை, மானிப்பாய்]

மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம் மா நடரா ஜா 29.03.2011 அன் று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னம்மா தம்பதியினரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற சாமிகந்தையா- முத்தம்மா தம்பதியினரின் மருமகளும், நடராஜா (பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், சவுந்தயன் (பொறியியலாளர் - Australia Victoria Government), வஜிரா (Mulberry School, London), கலாநிதி ஜனார்த்தனன் ( Bangor) அவர்களின் அன் புமிகு தாயாரும் ஆவார். ஐறீனா (Australia), மெய்யழகன் (BT பொறியியலாளர் (London), கௌரி ( Bangor) அவர்களின் அன்பு மாமியாரும், நர்த்தனா (London), அமீலியா (Australia) அவர்களின் அன்பு பாட்டியும், காலஞ்சென்ற இராஜரட்ணம், காலஞ்சென்ற இராஜநாயகம், திரு விஸ்வ லிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார் .

அன்னாரின் பூதவுடல் 03.04.2011 அன்று ஜெயரட்ண மலர்ச்சாலையில் (பொறளை) காலை 9 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் நடை பெற்று மாலை 3 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர் (011 2586158)

## ஐ.நா..... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை பெப்ரவரி மாத இறுதியிலேயே சமர்ப்பிப்பதற்குத் தயாராகி இருந்தது. எனினும் கடைசிநேரத்தில் இலங்கையில் இருந்து சென்ற விசேட குழுவினர் பான் கீ மூனுடனும் நிபுணர் குழுவினருடனும் நேரில் சந்தித்து நடத்திய பேச்சுக்களின் பின்னர் அறிக்கையைக் கையளிக்கும் திகதி பிற்போடப்பட்டது.

எனினும் அந்த அறிக்கை இந்த மாத நடுப்பகுதியில் ஐ.நா. பொதுச் செயலரிடம் உறுதியாகக் கையளிக்கப்படும் என்று தெரிகிறது. அதன் பின்னர் அந்த அறிக்கை பகிரங்க ஆவணமாக அனைத்துத் தரப்பினரும் பெறுவதற்கு வசதியாக வெளியிடப்படவும் உள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து அனைத்துலக சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அழுத்தம் உலகம் முழுவதும் வலுத்துவரும் நிலையில், நிபுணர் குழுவின் அறிக்கையும் அதற்கு ஆதரவான வகையிலேயே வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், இலங்கை வரவுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உதவிச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக், அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேகின் வருகையின் போது அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் கடுந்தொனியில் அமைந்த செய்தி ஒன்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்காகக் கொண்டுவரப்படும் என்றும் தெரிகிறது.

(உ-ஐ)


**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**
**பொதுக் கூட்ட மண்டபம் இடமாற்றம்**

03.04.2011 (இன்று) நடைபெறும் எமது சங்கத்தின் பொதுக்கூட்டம் முன்னர் அறிவித்தபடி எமது சங்க நிரந்தர அமைவிடத்தில் அல்லாது இல. 559, நாவலர் வீதியில் அமைந்துள்ள சங்க மண்டபத்தில் இடம் பெறும் என்பதனை சகல அங்கத்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கா.பாஸ்கரன் செயலாளர்.

**வெற்றி நடைபோடுகிறது**



2007 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய ரீதியில் தொடர்ந்து முதல் இடங்களைப் பெற்ற மாணவர்கள் பயிற்சி பெற்ற முன்னோடி வினாத்தாள்களை வெளியிட்ட வெளியீட்டு நிறுவனம்
**கொழும்பு எக்ஸ்பிரஸ் வெளியீடு**

**2011 ஆம் ஆண்டு தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட அதி விசேட மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள்.**

- ★பாடசாலைகளின் சிறப்பான வழிகாட்டலுடன் வெற்றி பெறும் மாணவர்களுக்கு மேலும் தங்கள் புள்ளிகளை உயர்த்த முற்றிலும் எதிர்பார்க்கத்தக்க, அதிவிசேட 10 மாதிரி வினாத்தாள்கள் 12+2 பக்கத்தில் (80g வெள்ளைத்தாளில்) வெளிவந்துள்ளது.
- ★இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் 2011 சித்திரை முதலாம் வாரம முதலாவது மாதிரிப் பரீட்சை நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- ★பதிவு செய்யப்பட்ட அனைத்துப் பாடசாலைகளுக்கும் வினாத்தாள்கள் அனுப்பிவைக்கப்படும். புதிய பதிவுகள் தொலைபேசியூடாக உறுதிப்படுத்திக் கொள்ளவும். (மாணவர்களின் நலன்கருதி குறைந்த விலையில் பாடசாலைகளுக்கு)

10 மாதிரி வினாத்தாளும் பாடசாலைகளுக்கு மட்டும் வழங்கப்படும். பணிப்பாளர்

தொ.பே: 077 1103395, யாழ்: 0778448762/3, 0779352395, 0213216922
போட்டோப்பிரதி அல்லது மறுபதிப்புச் செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது

**பழைய மாணவர் சங்கம்**
**முல்லைத்தீவு மகாவித்தியாலயம்**
**முல்லைத்தீவு**

**வருடாந்த பொதுக்கூட்டம்**

போரினால் இயங்காமல் இருந்த எமது பழைய மாணவர் சங்கத்தினை மீளக்கட்டியெழுப்பும் முகமாக இக்கூட்டம் நடைபெற உள்ளதால் பாடசாலை நலனில் அக்கறை கொண்ட அனைத்துப் பழைய மாணவர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*காலம் : 16.04.2011(சனிக்கிழமை)*
*நேரம் : மு.ப.10.00 மணி*
*இடம் : பாடசாலை மண்டபம்.*

பழைய மணவர் சங்கம்,
மு/முல்லைத்தீவு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு.

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

குறிப்பு I:- யூன் மாத ஜேர்மன் எம்பசி பரீட்சைகளுக்கான ஜேர்மன், Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.

குறிப்பு II:- நெதர்லாந்து டச், ஜேர்மன் டொச் புதிய வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை 02.04.2011 ஆரம்பமாகின்றது.

GOV.Rég.No W/A 76795 T.P: 0774842464, 0213216928, 0779927117

**38ஆவது வருட சேவையில்......**
**O/L Day Class விக்னா**
பிரிவு - 2

ஆரம்பம்-04.04.2011 (8.30 - 2.30)
- யாழில் O/L Day Class அங்கீகரிகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்
- இம்முறையும் பிரிவு 6 மட்டுமே
- அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பெற்றுக் கொள்ளுங்கள்
- தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி
- பாடசாலை போன்று 8.30-2.30 வரை நடைபெறும்.

தரம் 6,7,8,9,10,O/L 2ஆம் தவணை வகுப்புகள் 04.04.2011 ஆரம்பமாகின்றன(3.30 p.m)

விக்னா கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி,
யாழ்.(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

**உடன் வாடகைக்கு**

சந்தன மாதா கோயில் ஒழுங்கை, சுண்டுக்குளி யாழில் கூடிய பாதுகாப்புடன் கூடிய கடையும் (18x15) அத்துடன் சமையல் அறை தவிர்ந்த சகல வசதிகளுடன் கூடிய மேல் மாடியும் வாடகைக் குண்டு. (களஞ்சியம்/அதிகாரிகள் தங்குமிடங்களுக்கும் மிக உகந்தது)

தொடர்பு :- 0212220626

**யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர் குழுவினால்**
**O/L DAY CLASS**
**பிரிவு 2 ஆரம்பம்**
04.04.2011 திங்கள் காலை 8.00மணி
**நாவலர்** பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

BAJAJ
Distinctly Ahead

**இலங்கையில் அதிகமாக விற்பனையாகும் எரிபொருள் சிக்கனம் கொண்ட பஜாஜ் மோட்டார் சைக்கிள்**

**யாழ்.நகர விற்பனை முகவர்**
**S.J.MOTORS**

வாடிக்கையாளரின் நலன் கருதியும் எமது நிறுவனத்தை விஸ்தரிக்கும் நோக்குடனும்
**எமது புதியகிளையை இல.53, ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்**
எனும் முகவரியில் 04.04.2011 காலை 9.30 மணியளவில் திறந்துவைக்க உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.



04.04.2011 அன்று கொள்வனவு செய்யப்படும் மோட்டார் சைக்கிள் அனைத்திற்கும் இன்னொரு பெறுமதிமிக்க ஹெல்மட் இலவசம்.



(49,25,34)

முன்பதிவுகளுக்கு: 0771711819, 0217200750

**சுலபமாக நீங்கள் ரூபா 50,000/-க்கு மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்**

**ஐஸ் கிரீம் இயந்திரம்**



கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரொசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா soya / வெனிலா venila / சொக்கலேட் chocolate
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

BRAND NEW

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Hotlines: 077 391 8870, 077 385 0089

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

நிறை கூடிய புறொயிலர் வேண்டிய அளவுகளில் சுத்தம் செய்து மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
தொடர்பு - மல்ரி பாம் சென்றர், 61, இராமநாதன் வீதி, கலட்டி.


## மரண அறிவித்தல்

***சின்னையா மகாலிங்கம்***

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மகாலிங்கம் நேற்று (02.04.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், நவநீதனின் தந்தையும், றஜ்மிளாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி.
தகவல்
நவநீதன் (மகன்)


**பணிநிலை வேண்டுகை**

- கணனி பக்க வடிவமைப்பாளர் (ஆண்) Graphics Designer
- நேரச்சு பழகுனர் (ஆண்) Offset Machine Helpers
- புத்தகம் கட்டுனர் (பெண்) Book Binder
- ஒப்பு நோக்குனர் ( ஆண் / பெண் ) Proof Reader

**முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும்**

விண்ணப்பதாரிகள் 04,05-04-2011ஆம் திகதிகளில் நேரில் வரவும்

**கரிகணன் பிறிண்டேர்ஸ்**
424 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**Quick Learning Course**
**Spoken English with Grammar**

Duration 1 Month Rs. 3000.00

உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

18-04-2011
Batch 14 : 09.00 AM - 01.00 PM
Batch 15 : 01.30 PM - 05.30 PM

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசீ Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

**ஆன்றோரின் தெரிவில்**
**மாகாணத்தின் முன்னனி நிறுவனத்தில்**
**O/L DAY CLASS**
**ஆரம்பமாகி நடைபெறுகின்றது**
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன
The Express Institute
Irupalai, Kopay. -அதிபர்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பரந்தனில் வியாழன் இரவு ஒரேநேரத்தில் ஐந்து வர்த்தக நிலையங்களில் திருட்டு

கிளிநொச்சி, ஏப். 3

பரந்தன் சந்தியில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஐந்து வர்த்தக நிலையங்களில் கடந்த வியாழன் இரவு பெரும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பரந்தனிலுள்ள இரும்பு விற்பனை நிலையம், தொலைபேசி விற்பனை நிலையம், அழகு சாதன நிலையம், குளிர்பான நிலையம், பலசரக்குக் கடை என்பனவற்றின் மேற் கூரைகள் பிரிக்கப்பட்டுத் துணிகரமான முறையில் பணமும், பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவத்தில் இரும்பு விற்பனை நிலையத்தில் அடுத்தநாள் வங்கியில் இடுவதற்கென உரிமையாளரால் வைக்கப்பட்டிருந்த சுமார் 3 லட்சம் ரூபா பணமும், தொலைபேசி விற்பனை நிலையத்தில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 26 விலை உயர்ந்த கைத்தொலைபேசிகளும், அழகு சாதன நிலையத்தில் 30 கைத்தொலை பேசிகளும், ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டுள்ளன. குளிர்பான நிலையத்தில் சிகரெட் வகைகள், தொலைபேசிப் பண அட்டைகள் என்பனவும், பல சரக்குக் கடையில் குளிர்பான வகைகள், சிகரெட் வகைகள், 25 ஆயிரம் ரூபா பணம், மேசையில் வைக்கப்பட்டிருந்த காசுப் பெட்டி ஆகியனவும்திருடப்போயுள்ளன.

பரந்தனில் இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையிலேயே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியில் 24 மணித்தியாலமும் போக்குவரத்து இடம்பெறுவது வழமையாகும். அத்துடன், திருட்டு நடந்த கடைகளிலிருந்து 25 மீற்றர் தூரத்தில் இராணுவ முகாம் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பொலிஸார் இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இதற்கிடையில், வர்த்தக சங்கத்தினர், கிராம அலுவலர்கள் ஆகியோரை அழைத்துக் கலந்துரையாடிய முகாம் இராணுவ அதிகாரி, இந்தத் திருட்டுக்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் 30 வருடகாலமாக மக்களை அச்சுறுத்திய பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துள்ளோம்.

ஆனால், பயங்கரவாத இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற சிலரே மக்களைக் குழப்புவதற்காக இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிகின்றது. எதிர்காலத்தில் இதுபோன்றசம்பவங்கள்நிகழாமல் தடுக்கப்படும் என்றும் கூறினார். (க-06)

## மண்ணெண்ணெய் விலையும் 10 ரூபாவால் அதிகரித்தது !

யாழ்ப்பாணம், ஏப். 3

மண்ணெண்ணெயின் விலையும் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதன்படி, இதுவரை காலமும் 51 ரூபா 60 சதமாக விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் நேற்று சனிக்கிழமை முதல் 61 ரூபா 60 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெற்றோலின் விலை 125 ரூபா 60 சதமாகவும், டீசலின் விலை 76 ரூபா 60 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9-26)

## வரிகள் தொடர்பான கருத்தரங்கு

கிளிநொச்சி, ஏப். 3

கிளிநொச்சி வர்த்தகர் சங்கம், வரி செலுத்துவோர் மற்றும் வரி ஆலோசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் வரி செலுத்துநர் சேவைப் பிரிவின் அனுசரணையுடன் இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வரி விதிப்பனவு தொடர்பான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

வர்த்தகர்கள், கணக்காளர்கள், பொதுமக்கள் மற்றும் வரி விடயத்தில் ஆர்வமுள்ள அனைவரையும் இந்தக் கருத்தரங்கில் கலந்துபயன்பெறுமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி தெரிவித்துள்ளார்.

முன்னேற்றப் பாதைக்கு...



அழைத்துச் செல்லும் பணி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை அராலி கிழக்கு விளையாட்டுக் கழக உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறிதரன் ஆகியோர் உரையாற்றுகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விளையாட்டு உபகரணங்களைக் கழக உறுப்பினரிடம் வழங்குகிறார்.

## சித்தியடையாத மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துக

### கல்வியமைச்சின் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கு 2 ஆம் தடவை தோற்றுவதற்குப் பிரத்தியேக வகுப்புக்களைப் பாடசாலைகளில் நடத்துமாறு வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அதிபர்களிடம் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறுகின்ற பாடசாலை மாணவர்களை உரிய முறையில் கவனமெடுக்காது விடுகின்றபோது அவர்கள் சமூக நீரோட்டத்தில் வேண்டத் தகாத வகையில் முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இத்தகைய மாணவர்கள் மீது அதிக கரிசனையெடுத்து பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் 2 ஆம் தடவை பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பிரத்தியேக வகுப்புக்களைப் பாடசாலைகளில் நடத்தி அவர்கள் சித்தியடைய வழி செய்ய வேண்டும்.

அனேகமான பாடசாலைகளில் ஒருவகுப்பில் கற்பிக்கக் கூடிய எண்ணிக்கையில் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையத் தவறியுள்ளார்கள்.

இவர்களுக்குப் பாடசாலை நாள்களில் வகுப்புக்களை நடத்தி உயர்தரம் படிப்பதற்குரிய பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள அர்ப்பணிப்புடன் அனைவரும் செயற்படவேண்டும் - என்றார். (த-9)

## ஒலிம்பியாட் தேசிய மட்டப் போட்டிக்கு வடக்கில் இருந்து 12 மாணவர் தெரிவு

கொழும்பு, ஏப்.3

வடமாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தரம் 6,7 மாணவர்களுக்கான தேசிய மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சைக்கு 12 மாணவர்கள் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். இந்தப் பரீட்சைக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலிருந்து பரமானந்தன் கஸ்தூரி, ராஜசேகரன் தாக்சாயினி ஆகியோரும், வவுனியா இறம்பைக் குளம் மகா வித்தியாலயத்திலிருந்து ஸ்ரீகந்தராஜா அபிராமியும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலிருந்து நீலலோகன் தவபால சுந்தரமும், இளங்கோ இளங்கீதன், அருளாநந்தம் அபிநந்தன் ஆகியோரும் யாழ். இடைக்காடு மகாவித்தியாலயத்திலிருந்து முருகையா பிருந்தாபனும், வவுனியா தமிழ் மாகாவித்தியாலயத்திலிருந்து பாலச் சந்திரன் அபியுத்தனும் மன்னார் புனித சவேரியர் மகாவித்தியாலயத்திலிருந்து இ. ஆர்.எஸ் பானுஜன் மிராண்டா, ஜெனிஸ் பிகரடோ யூட்மிதுசன் ஆகியோரும் மன்னார் சித்திவிநாயகர் வித்தியாலயத்திலிருந்து காந்தரூபன் யுகேஸ்சும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலிருந்து தியோபினாஸ் கிலாரி அன்ரனைஸ்சும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கான தெரிவுப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை கல்வி அமைச்சின் இசுறுபாய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அந்தந்த பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வட மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார். (313)

## முற்றவெளியில் குவிந்துள்ள பொலித்தீன்களால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ். முற்றவெளிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளால் போடப்படும் பொலித்தீன் பைகள் சீரான முறையில் அகற்றப்படாமையால் அந்தப் பகுதி எங்கும் பொலித்தீன்கள் நிரம்பிச் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலித்தீன் பைகள் குவிந்துள்ள இடங்களில் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக்காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டுக்குச் சுற்றுலா வரும் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளும் கொழும்புக்குப் பயணிப்பதற்காக முற்றவெளியில் உள்ள தனியார் பஸ் நிலையத்துக்கு வரும் பயணிகளும் பயன்படுத்தும் பொலித்தீன் பைகள் பின்னர் அந்தப் பகுதிகளில் வீசப்படுகின்றன.

குறிப்பாக தனியார் பஸ்நிலையம், முனீஸ்வரன் கோயில், புல்லுக் குளம், துரையப்பா விளையாட்டரங்கு, கொட்டடிமீன் சந்தைக்கு முன்னால் உள்ள பகுதி ஆகிய இடங்களிலேயே அதிகளவு பொலித்தீன் பைகள் அகற்றப்படாமல் இப்போது தேங்கியுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இந்தப் பகுதிகளில் பொலித்தீன் பைகள் தேங்கிக் கிடைந்தன. எனினும் அப்போது குடாநாட்டில் டெங்கு அபாயம் இருந்தமையால் யாழ்.மாநகரசபை சுகாதாரத் தொழிலாளர்களால் அவை அகற்றப்பட்டு வந்தன. அதன் பின்னர் கிரமமாக அகற்றப்பட்டு வந்த பொலித்தீன் பைகள் கடந்த சில வாரங்களாக அகற்றப்படாமல் விடப்பட்டுள்ளன.

இதனால் அந்தப் பகுதி பொலித்தீன் பைகளால் நிரம்பிச் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன் புல்லுக்குளத்தின் உள்ளேயும் பெருமளவான பொலித்தீன்கள் தேங்கியுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே யாழ்.மாநகர சபை இதில் அதிக அக்கறை காட்டி இவற்றை உடன் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-26)

# 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

**நயினாதீவு (நாகதீப) ரஜமகா விகாரையின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரோ (அகில இலங்கை சமாதான நீதிவான்) அவர்களின் 50 ஆவது பிறந்த தினமான இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது சேவையைப் போற்றி வழங்கப்படும் வாழ்த்து.**



நயினாதீவு (நாகதீப) ரஜமகா விகாரையின்
விகாராதிபதி வணக்கத்துக்குரிய

## நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரோ

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

அலைகடல் சூழ் நயினையில் அரும் பணிகள் ஆற்றி வருபவர்களின் வரலாற்றில் தனக்கென்ன ஓர் இடம்பிடித்தவர் வணக்கத்துக்குரிய நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரோ அவர்கள். இவர் தனது குருவாகிய அமரர் பிராக்மனவத்தே தர்மகீர்த்தி திஸ்ஸமகா நாயக்க தேரோவின் சீடனாகத் தனது 11 ஆவது வயதில் நயினை மண்ணில் காலடி எடுத்து வைத்து அவரின் வழித்தோன்றலாக சுமார் நாற்பது வருடங்கள் வரை நயினை மண்ணுக்கு அரும்பணிகள் ஆற்றி வருகின்றார். இவர் ஏழைகள், பாமரர், பணக்காரர், இனம், மதம், மொழி என்ற வேறுபாடுகள் யாவும் நீக்கி எல்லோரும் தன்னுடைய உறவுகள் எனப் பழகுபவர்.

'எடுத்த பணி முடிக்காது இமையா நெஞ்சம்
எவருடனும் அன்பாகப் பழகும் செம்மல்'

என்பதற்கேற்ப தான் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றும் போது அப்பணியை உடனே செய்து முடிக்கின்ற தத்துவம் வாய்ந்தவர். இவரின் 50 ஆவது பிறந்த தினத்திலே நயினாதீவில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பத்துக்கு அழகிய இல்லத்தை அமைத்துக் கொடுத்து அரும்பணிகள் ஆற்றி வருகின்றார். அதுமட்டுமன்றி தனது குருவாகிய தர்மகீர்த்தி திஸ்ஸ மகாநாயக்க தேரோ அவர்களின் ஞாபகார்த்தமாக அரசினர் வைத்தியசாலையின் முன்பாக பயணிகள் நிழற்குடையினை அழகிய முறையிலே அமைத்து ஊர் மக்கள் பயன்பட வழி வகுத்து நிற்கின்றார்.

'வித்துவத் தன்மையிலே செயலாற்றும் செயல் வீரன்'

பேச்சு திறன் மிக்கவர். தமிழ், சிங்கள மொழியிலே பேச்சு வல்லமை கொண்டவராகையினால் தனது ஆலயத்துக்கு வருகின்ற தலைவர்கள், பெரியவர்களுடன் கதைத்து ஊரின் அபிவிருத்தியைக் குறிக்கோளாகக்கொண்டு அவர்களின் உதவியோடு ஊரை அபிவிருத்திப் பாதையில் இட்டு வருகின்றார்.

நயினாதீவைப் பொறுத்த வரையில் நாகதீப விகாரை, நாகபூஷணி அம்மன் ஆலயம் ஆகியவற்றை நாடிவருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியார்களை அன்பாலே அரவணைத்து தனது சக்திக்கு உட்பட்ட அனைத்து சேவைகளையும் செய்து அவர்கள் திருப்தி கொள்ளும் வகையில் வழி வகுத்த உத்தமன்.

'தனக்கென முயலாத செயல் வீரன்'

எக்காரியமாக இருந்தாலும் தனக்கு என ஒரு காரியத்தையோ அல்லது சேவையையோ பெற்றுக்கொள்ளாமல் ஊரவர், ஊர்மக்கள் நயினை மண் என்று பாடுபடுபவர்களில் தனி இடத்தை வகிப்பவரும் இவரே.

'ஊரைப் போற்றிக் காத்த உத்தமன்'

நாட்டின் அசாதாரண நிலைமைகளில் கூட நயினாதீவில் எந்தவிதமான இடையூறுகளும் இன்றி நயினை மக்கள் விரும்பியபடி சுதந்திரமாக நடமாடுவதற்கு உறுதுணையாக நின்ற உத்தமன்.

*'நயினையின் சேவையிலே நாயகமாநீர்*
*நானிலத்தின் பெருமை தனை தன்னகத்தே கொண்டு*
*உவகையுடன் புன்சிரிப்பு முகத்தில் தேக்கி*
*ஊரவரை நாடி நீரும் சேவை செய்து*
*அகவையது ஐம்பதில் ஆகும் போதும்*
*அன்புடனே பெரும் பணிகள் பலவும் செய்வீர்*
*இன்பமுடன் உம் சேவை நாங்கள் ஏற்று*
*இதயத்தால் வாழ்த்துகிறோம் நீடு வாழ்க!*

**வாழ்த்துவோர்: ஊர் மக்கள் சார்பில்,**
**பு.திலீப்குமார், ந.ஜெகதீஸ்வரன், நா.பரமநாதன்.**

### வேலணை பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி..



வணக்கத்துக்குரிய நாகதீப விகாராதிபதி பதுமகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரோ (அகில இலங்கை சமாதான நீதிவான்) அவர்களின் 50 ஆவது பிறந்த நாளிலே வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டு பெருமையடைகின்றேன்.

வேலணை பிரதேச செயலராகக் கடமை ஏற்ற காலம் தொடக்கம் இவரோடு நெருங்கிப் பழகியவர்களுள் நானும் ஒருவன். இவர் வித்துவத்தன்மை, மொழி ஆற்றல், செயற்றிறன் யாவும் கொண்டு ஊரவர், நயினை மக்கள், தீவக மக்கள் என்ற பதத்தோடு செயற்படுகின்ற உயர்ந்த உத்தமர்.

'வேண்டுவோர் வேண்டுவதை வாரி வழங்கும் வள்ளல்'

யார் தன்னை நாடி வருகின்றார்களோ அவர்களுக்கு தன்னால் ஆன உதவிகளை இல்லை என்ற பதத்தை நீக்கி வழங்குகின்றேன் என்ற பதத்துடன் செயற்படுபவர். பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வருகை தருகின்ற புனிதமான தீவாகிய நயினாதீவின் விகாராதிபதி அவர்கள் பெருமைகள் அற்ற ஒருவர். ஊரின் அபிவிருத்திப் பாதையிலே தன்னுடைய முக்கியமான பங்களிப்பினை முழு மூச்சுடன் செய்து வருகின்றார்.

தனது11 ஆவது வயது முதல் தனது 50 ஆவது வயதுவரை போற்றப்படவேண்டிய வாழ்த்தப்படவேண்டிய அரும்பணிகள் பலவற்றை ஆற்றி வருகின்றார். ஊரின் அபிவிருத்திக்காக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வேலைகளை முன்னின்று செய்து முடிக்கின்ற வித்துவத்தன்மை வாய்ந்தவர்.

நாகதீப ரஜமகா விகாரை, நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் ஆகிய இரு பிரசித்தி பெற்ற ஆலயங்கள் அமைந்துள்ள தீவினை உள்ளடக்கிய வேலணைப் பிரதேசத்தில் பிரதேச செயலராக என்னால் கடமை ஆற்றுகின்ற இவரின் ஒத்துழைப்பு மற்றும் முன்னேற்றகரமான கருத்துக்களை புரிந்துகொள்ள முடிந்தது.

இவ்வாறு பெருமை பெற்ற நாகதீப விகாரையின் பீடாதிபதி அவர்களின் 50 ஆவது பிறந்த தினத்தில் நானும் வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் பெருமை அடைகின்றேன்.

**திரு.முத்துலிங்கம் நந்தகோபாலன்**
தீவகம் தெற்கு,
பிரதேச செயலர், வேலணை.

### பொதுச் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்த பெரியவர்



வரலாற்றுப் பெருமை நிறைந்த நாகதீப ரஜ மகா விகாரையின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரோ (அகில இலங்கை சமாதான நீதிவான்) அவர்களின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமைஅடைகின்றேன்.

தனது 11 ஆவது வயதிலே துறவறம் பூண்டு இன்று 50 வயதில் காலடி வைக்கும் மதிப்புக்குரிய தேரோ அவர்கள் நயினை வாழ் மக்களால் மிகவும் மதிக்கப்படுகின்ற ஒருவர். சிறியவர்கள் முதல் பெரியவர்கள்வரை மிகவும் அன்போடும் இன, மத, மொழி பேதமின்றியும் மிகவும் சகஜமாகப் பழகுவார். தமிழ் மொழியிலே இவருக்கு இருக்கும் பாண்டித்தியம் தமிழ் மக்களிடையே இவரை மிகவும் இலகுவாகக் கொண்டு செல்ல வைக்கின்றது. துன்பம் என்று வருகின்ற மக்களுக்கு மனமுவர்ந்து உதவிபுரிவார். அத்தோடு மட்டுமன்றி ஊரின் அபிவிருத்திக்காக அரும்பாடுபட்டுப் பொதுச்சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்த பெரியவர். புத்த பெருமானின் வழிநின்று அவர் போதனைகளை மக்களுக்கு உணர்த்தி அதன்வழி நடப்பவர்.

தான் நினைத்த காரியங்களை மிகவும் நேர்த்தியாகவும் செயல்திறனோடும் நடத்தி அக்காரியத்தில் முழுநிறைவை அடையவேண்டும். அதன் மூலம் மக்கள் முழுப்பயனையும் பெறவேண்டும் என்று உறுதியுடன் இருந்து நிறைவை அடைவார். 'சின்னசாது' என்று நயினை மக்களால் அன்போடும் அழைக்கப்படும் தேரோ அவர்கள் மேலும் பல சாதனைகளை நிலைநாட்டி சீருடனும் சிறப்புடனும் வாழ நயினைத்தாயை வணங்கி அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன்.

வாழ்க உங்கள் புகழ்! வளர்க உங்கள் சேவை!

**நவரெத்தினம் மோகனரூபன்**
பொறுப்பதிகாரி, வேலணை பிரதேச சபை
உப அலுவலகம், நயினாதீவு.

(48,27,26)

# சகல தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு தலைசிறந்த பல்கலைக்கழகமாக உருவாக்க உழைப்பேன்

## முதலாவது பெண் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி உறுதி

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தில் எதுவித அரசியல் அழுத்தங்களுமின்றி சுதந்திரமான முறையில் பல்கலைக் கழக சமூகம் பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், மாணவர்கள் மற்றும் புத்திஜீவிகளின் ஒத்துழைப்புடன் இப் பல்கலைக்கழகத்தை தலைசிறந்த பல் கலைக்கழகமாக உருவாக்க சகல முயற்சி களையும் மேற்கொள்வேன் - என உறுதி யுடன் கூறுகின்றார் யாழ்.பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தர் பேராசி ரியை வசந்தி அரசரட்ணம்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் துணைவேந்தர் ஆசனத்தை அலங்கரிக் கும் முதல் பெண்மணி என்ற பெரு மையைத் தட்டிக்கொண்ட வசந்தி அரச ரட்ணம் உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியின் போதே இவ்வாறு தெரிவித் தார்.

கடந்த வெள்ளிக்கிழமை துணை வேந்தராகப் பதவியேற்றபின் அவரது இல்லத்தில் சந்தித்தபோது இடம்பெற்ற கலந்துரையாடலில் அவரிடம் கேட்கப் பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

**கேள்வி:-** பல்கலைக்கழகத்தின் கல் வித்தரம், ஆசிரியர்கள், மாணவர்களின் நடத்தை தொடர்பாக பல்வேறு வித மான விமர்சனங்கள் வந்துகொண்டிருக் கின்றன. நீங்களும் இப்பல்கலைக் கழ கத்தில் பல்வேறு உயர் பதவிகளில் இருந்துள்ளீர்கள். அவை தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன?

**பதில்:-** ஆக்கபூர்வமான விமர்சனங் களாக இருந்தால் இவற்றை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இவை திட்டமிட்டு சேறுபூசும் வகையிலான விமர்சனங்களே இதனைக் கண்டிக்கின்றேன். ஏதிர்காலத் தில் இப்படியான விமர்சனங்களுக்கு இடமளிக்காத வகையில் அவதானத்து டன் செயற்படுவேன்

இவ்வளவு காலமும் குடாநாட்டில் ஏற்பட்ட பாதிப்புக்கள், மாணவர்களும் விரிவுரையாளர்களும் முகம் கொடுத்த பிரச்சினைகள், உளத்தாக்கங்கள் தொடர் பாகக் கூடுதலான அக்கறை செலுத்த வேண்டியிருந்தது. இப்பொழுது கல்வி நடவடிக்கைகளுக்கே முன்னுரிமை வழங்கி அக்கறையுடன் செயற்படும் நேரம் வந்துவிட்டது. இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்

### ஒழுக்கக் கட்டுப்பாட்டில் அதிக கவனம் செலுத்தப்படும்

**கேள்வி:-** இங்கு 70 வீதமான மாணவி களும் 50 வீதமான இளம் பெண் விரிவு ரையாளர்களும் இருக்கின்றனர். இவர் கள் பல சில்மிஷங்களுக்கும் சேட்டை களுக்கும் உள்ளாக்கப்படுவதாக உள் ளும் புறமும் பேசப்படுகின்றது. இந்த நிலையில் நீங்களும் துணைவேந்தரா கப் பொறுப்பேற்றுள்ளீர்கள். இவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக என்ன நடவ டிக்கை எடுப்பீர்கள்?

**பதில்:-** எனது நிர்வாகத்தில் ஒழுக் கம், கட்டுப்பாடு மிகவும் கண்டிப்பாக இருக்கும். நேர்மையாக நிர்வாகம் நடத்தும் போது எல்லோரையும் திருத்திப்படுத்தமுடி யாது. கண்டிப்பாக இருந்தே ஆகவேண்டும். இங்கு ஒட்டுமொத்த மாக எல்லோர் மீதும் குறைகூறிவிட முடி யாது. தனியொரு பக் கத்தால் மட்டும் தவறு கள் இடம்பெறவும் முடி யாது சிற்சில தவறுகள் இடம்பெற்றிருக்கலாம். அவர்களை இனங் கண்டு ஆற்றுப்படுத்தி (கவுன்சிலிங் செய்து) நல்வழிப்படுத்த முடியும். ஆசிரியர், மாணவர் சமூகத்தில் புரிந்துணர்வையும் சகோதரத்துவத்தை யும் ஏற்படுத்த சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன். எனது ஆசிரியர் குழாத் தினர் இந்த விடயத்தில் எனக்கு முழு ஆதரவையும் வழங்குவார்கள் என்ற நம் பிக்கையும் எனக்கு உண்டு.



### எல்லோரது ஒத்துழைப்புடனும் பொறியில் பீடம் உருவாக்கப்படும்

**கேள்வி:-** கடந்த காலங்களில் யாழ். பல்கலைக்கழக அபிவிருத்தி நடவடிக் கைகளுக்கு வழங்கப்பட்ட பெருந் தொகை நிதி பயன்படுத்தப்படாதத னால் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை நீங்கள் அறிவீர்களா?

**பதில்:-** கடந்த கால நிகழ்வுகள் தொடர்பாக எதையும் கூறி யாருடைய

**உதயனுக்கு விசேட செவ்வி**

மனதையும் புண்படுத்த நான் விரும்ப வில்லை. எதிர்காலத்தில் எமக்குக் கிடைக்கும் நிதி மற்றும் வளங்கள் அனைத்தும் கல்வி அபிவிருத்தி நடவடிக் கைகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப் படும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு சதமேனும் திரும்பிப் போக விடமாட் டேன்.

**கேள்வி:-** பல்கலைக்கழக நிர்வாக மட்டத்தில் உயர்நிலை அதிகாரிகளுக் கிடையிலான போட்டிகளும் கருத்து முரண்பாடுகளும்தான் பொறியியல் பீடம் உருவாக்கப்படுவதில் இழுபறி நிலையையும் முட்டுக்கட்டையையும் ஏற்படுத்தி உள்ளதாக குற்றம் சாட்டப் படுகின்றதே?

**பதில் :-** நானும் ஒரு பேரவை உறுப் பினர் என்பதால் சில விடயங்களை அறிவேன். பேராசிரியர் குமாரவடிவேல் அவர்களின் தலைமையிலான குழுவினர் ஏற்கனவே பொறியியல் பீடம் தொடர் பான சாத்தியக் கூற்றறிக்கை மற்றும் கட்டமைப்புத் திட்டங்களையும் தயாரித் துச் சமர்ப்பித்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக அந்தந்த மூல வளங்கள், அடிப்படை உட்கட்டமைப்பு, அவசியமான மூலதன முதலீட்டுச் செலவு, தேவைப்படும் நிதி தொடர்பான விரிவான செயற்றிட்ட அறிக்கை என் பன அவசியம். இதில்தான் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. நிர்வாக மட்டத்தில் எவ்வித கருத்து முரண்பாடுகளும் இல்லை. நாம் அன்றும் இன்றும் ஒன்றாகவே செயற்படுகின்றோம். கூடிய விரைவில் அனைவரின் ஒத்துழைப்புடனும் பொறியி யல்பீடம் உருவாக நடவடிக்கை எடுப்பேன்.

### விவசாய, பொறியியல் பீடங்கள் கிளிநொச்சியில் அமைவதே பொருத்தம்

**கேள்வி:-** உயர்கல்வி அமைச்சர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கி வந்த விவசாய பீடத்தை கிளிநொச்சிக்குச் கொண்டு சென்று தனியான வளாகமாக அமைப்பதாகக் கூறினார். இது எவ்வளவு தூரம் சாத்தியமானது?

**பதில்:-** கிளிநொச்சியில் விவசாய வளாகத்தை உருவாக்குவது மிகவும் பொருத்தமானதாகும். காரணம், அங்கு தேவையான காணி மற்றும் மண் வளம் நிறைந்துள்ளது. மேலும், கிளிநொச்சி விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட பிரதேசமாகும்.அங்கு விவசாயபீடம் இயங்குவது பலன்தரக்கூடியதாக இருக்கும்

**கேள்வி:-** பொறியியல் பீடம் யாழ்ப் பாணத்துக்கு உள்ளேயே அமைய வேண் டும் என சிலர் விடாப்பிடியாக இருப்பதா கக் கூறப்படுகின்றது. இதில் உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** பொறியியல் பீடம் கிளி நொச்சியில்தான் அமைக்கப்படும். ஆட் சேபனைகளுக்கு இடமே இல்லை. பல் கலைக்கழக மூதவையும் கவுன்சிலும் ஏகமனதாக இதனைத் தீர்மானித்துள் ளனர். யாழ் பல்கலைக் கழகம் சர்வதேச மட்டத்துக்கு தரம் உயர்த்தப்படும் பல் கலைக்கழகங்களில் ஒன்றாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு பெரு மளவிலான காணி தேவை. எனவே பொருத்தமான காணிகளைப் பெறுவது கடினம். கிளிநொச்சியில் காணிகள் தாராளமாக இருக்கின்றன. கிளிநொச்சிப் பிரதேசத்தில் பொறியியல் வளாகம் அமையும்போது அப்பிரதேசத்தில் தொழிற்சாலைகளும் தொழில் பேட்டை களும் உருவாகும் வாய்ப்புகள் உண்டு. இதனால் இங்கு கல்வியைப் பெறும் மாண வர்களுக்குப் பெரும் நன்மை ஏற்படும். அதுமட்டுமன்றி பொறியியல் மற்றும் விவ சாய பீடங்கள் அருகருகே அமைவதால் நூல் நிலையம், ஆய்வுகூடங்கள் போன் றவை பொதுவாக அமையும் வாய்ப்பும் அதிகமாக உண்டு. இதனால் இரு தரப்பு மாணவர்களுக்கிடையே வளப்பகிர்வு களை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

### நிர்வாகத்தில் அரசியல் அழுத்தங்களுக்கு இடமளிக்கமாட்டேன்

**கேள்வி:-** தென் பகுதியில் அரசியல் கட்சிகளின் ஊடுருவலால் பல்கலைக் கழகக் கல்வி சீரழிக்கப்பட்டுள்ளது. குறிப் பாக ஜே.வி.பி , ஐ.தே.க , உட்பட ஆளும் கட்சியின் ஊடுருவலும், தலையீடுகளும் அதிகரித்துள்ளன. குறிப்பாக அங்கு பேராசிரியர்களுக்கும் பீடாதிபதிகளுக் கும் இல்லாத வரவேற்பு அரசியல் வாதி களுக்குக் கிடைக்கிறது. இங்கும் இப்படி யான அரசியல் தலையீடுகள் இருக்கின் றனவா? அத்தகைய ஊடுருவல்கள் தொடர்பாக என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:-** யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் எல்லோருமே கல்வியைப் பெரும் சொத்தாக மதிப்பவர்கள். ஆளும் தரப்பு என்றாலும் எதிர்தரப்பு என்றாலும் இங்கு கல்வி நிர்வாக நடவடிக்கைகளில் தலையிடுவதில்லை. இவ்விடயத்தில் நான் அரசியில் அழுத்தங்களுக்கு இட மளிக்கமாட்டேன். சுதந்திரமாகச் செயற் படுவதில் உறுதியாக இருக்கின்றேன்.

செவ்வி:
**இரா.புத்திரசிகாமணி**

**கேள்வி:-** பல்கலைக்கழக உயர் நிலை அதிகாரிகள் அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் நிகழ்வுகளிலும் விழாக்களிலும் கலந்துகொள்வதால் பல விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இது மாணவ சமூகத்திலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்கின்றனர். இது சரியா?

**பதில்:-** இதில் கருத்துச் சொல்ல நான் விரும்பவில்லை. இவ்வாறான நிகழ்வுகளில் கலந்துகொள்ள எனக்கு நேரமும் இல்லை. மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கே என்னை ஈடுபடுத்திக் கொள்ளப் போகிறேன்.

**கேள்வி:-** இப்பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே இயங்கி வந்த பல பீடங்கள் மூடப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பீர்களா?

**பதில்:-** உங்கள் கேள்வியில் உண்மை உண்டு. வர்த்தக முகாமைத்துவ பீடம் மூடப்பட்டுள்ளது. இதற்கென தனியாக காணியும் வாங்கப்பட்டுள்ளது. ஆனால் இதைப்பற்றி எவரும் அக்கறை காட்ட வில்லை. இதனை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளேன். இங்கு கடமையாற் றும் விரிவுரையாளர்களைத் திரட்டி அவர்களின் ஒத்துழைப்புடன் இதனைச் செயற்படுத்துவேன். இப்பொழுது வர்த் தக முகாமைத்துவப் பட்டதாரிகளுக்கு நல்ல வரவேற்புண்டு. இதனால் இங்கும் நாம் பல பட்டதாரிகளை உருவாக்க முடியும்.

# வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும்போது புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கு முன்னுரிமை

## சண்டிலிப்பாய் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும் போது அந்தப் பகுதிகளில் உள்ள புனர் வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண் டும்.

இவ்வாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிர தேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத் தில் தீர்மானம் நிறைவேற்றப்பட் டுள் ளது.

வாழ்வாதார உதவிகள் வழங்கப் படும்போது முன்னாள் போராளிகள் ஒதுக் கப்படுதல், தொழில் வாய்ப்பினைத் தேடும்போது எதிர்கொள்ளும் பிரச்சி னைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினால் இந்தத் தீர்மா னம் கொண்டுவரப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மேலும் ஆராயப் பட்ட விடயங்கள் வருமாறு:

காக்கைதீவுச் சந்தையில் வாகனப் பாதுகாப்பு வரி பெறப்படுகின்றமை தொடர்பாகவும் சந்தையில் ஏலம் மூலம் மீன் கள் விற்பனை செய்வது தொடர் பாகவும் இதில் கலந்துரையாடப் பட்டது.

அத்துடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங் களில் பாலங்கள், மதகுகள், வாய்க்கால் கள், வீதிகள் புனரமைப்புச் செய்தல், மின் சாரம், குடிதண்ணீர் பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகள், விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளை விருத்தி செய்தல், கிராமங்களின் அபிவிருத்தி தொடர் பான விடயங்கள் தொடர்பாக வும் இதில் கலந்துரையாடப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட் டத்தில் சகல திணைக்களங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் சமூக நலச் சேவை உத்தியோகத்தர்களும் அரசசார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

(த-313)

## ஆள்கள் தேவை

நல்ல முறையில் தையல் தெரிந்த ஆண், பெண் பணியாளர்கள் தேவை.
தொடர்பு:- 0774545695

## வீசா சேவை

UK Student Visa செல்வதற்கான April & May intakeற்கான அனுமதிகள் பெற்றுக் கொடுத்தல், ஆவணங்கள் ஒப்புநோக்குதல், Financial Sponsorship என்பன மற்றும் USA, Malaysia, Cyprus போன்ற எல்லா நாடுகளுக்குமான Student Visa பெறுவதற்கான ஆலோசனை
தொடர்பு: 0779218444

## நேர்முகத் தேர்வு

நோர்த்சீ லிமிட்டெட்டின் வாகன ஓட்டுநர், விற்பனை அலுவலர் ஆகிய பதவிகளுக்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 05.04.2011 நோர்த்சீ லிமிட்டெட்டின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

விவரம் நாளைய பத்திரிகையில் வெளிவரும்.

(AE)

## வீடு விற்பனைக்கு

தொடர்மாடியில் உள்ள வீடொன்று கொழும்பு நகரில் விற்பனைக்கு உண்டு. 3 அறைகள், 1மண்டபம், ஒரு இணைந்த குளியலறை மற்றும் மலசல கூட வசதிகளுடன்.
தொடர்பு: 0717490290

## தேவை, விற்பனைக்கு

வீட்டு வேலைக்கு உதவியாளர் தேவை.
சுப்பர் கப் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0217200239

## பிரத்தியேக வகுப்பு

கணக்கீடு
O/L, A/L, பட்டப்படிப்பு, வங்கியியல்
(2890) (34) 0776158080

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. S.B.அரசகுமார்

[முகாமையாளர், இலங்கை வங்கி மேற்தரக்கிளை, சுன்னாகம்]



இன்று அகவை அறுபதை அடைந்து ஓய்வுபெறும் திரு.S.B. அரசகுமார் அவர்கள் கடந்த காலத்தில் விவசாயப் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழங்கிய அளப்பரிய சேவையைப் பாராட்டுவதுடன் அவர்களின் ஓய்வுக் காலத்தில் குடும்பத்தினருடன் இனிதே இன்புற்றிருக்கவும் ஆன்ம ஈடேற்றம் பெறவும் இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அங்கத்தவர்கள்

வலி.கிழக்கு திராட்சை உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம். (2858)(41,19,24) உரும்பிராய் வடக்கு, விவசாய சம்மேளனம்.

## வேலையாள் தேவை

யாழ்.நகரினை அண்மித்த பகுதிகளில் தையல் தெரிந்த பெண் பிள்ளைகள் உடனடியாகத் தேவை.
தொடர்பு: 0777510092

## German Institute

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் German Embassyயால் கேட்கப்படும். A1 Examக்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
10, Palaly Road,Jaffna. T.P 0771604823

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, முத்துமாரி அம்மன் வீதியில், அம்மன், சிவன் கோயிலுக்கு அருகில் மூன்று பரப்புக்காணியுடன் மூன்று அறையுள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
நேரடி தொடர்பு: 0771326528 (2912)

## வேலை ஆள்கள் தேவை

ராஜா கிறீம் ஹவுஸ்
கோக்கி, சப்பிளயர்
உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
இல:-37, சேர் பொன் இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 3207369
(2918)

## கண்ணீர் அஞ்சலி



எமது இனிய நண்பர்
மா.ஞானேஸ்வரன் (பொறியியலாளர்)
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி அருந்ததி மாணிக்கவாசகர்
(லண்டன்)
அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
க. கிருஷ்ணராஜா குடும்பத்தினர்.
27/4, இந்து மகளிர் கல்லூரி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(40)(2925)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபனத்தின் உரிமையாளர்
பரராஜசிங்கம் ஸ்ரீகரன்
அவர்களின் பாசமிகு மாமி
திருமதி சௌந்தர்ராஜா மங்கையர்க்கரசி
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
யாழ்ப்பாண இரும்பகம், 32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(40)(2926)

## சேவைநலன் பாராட்டி வாழ்த்தும் நிகழ்வு

உப அஞ்சல் அதிபர் தம்பு கணேசன் J.P



இடம்: பொலிகண்டி வீரபத்திரர் ஆலய முன்றல்
காலம்: இன்று (03.04.2011) ஞாயிறு மாலை4.30 மணி

வயதில் முதுமை அடைந்தாலும்
உள்ளத்தால் என்றும் இளமையான
எங்கள் கிராமத்தின் கடமை வீரன்
தம்பு கணேசன் அவர்களை நீடு வாழ வாழ்த்துகின்றோம்.

பொலிகண்டி பாரதி சனசமூக நிலைய உப தலைவராக
பாரதி விளையாட்டுக்கழக செயலாளராக
பாரதி ஐக்கிய நாணய சங்கத் தலைவராக
பாரதி முன்பள்ளித் தலைவராக
பொலிகண்டி வீரபத்திரர் ஆலய நிர்வாக சபை உறுப்பினராக
நீங்கள் முன்பு ஆற்றிய சேவைகளையும் மனதில் பதித்து
மேன்மேலும் பல சேவைகளை ஆற்றி குடும்பத்துடன் சிறப்புற வாழ
இந்த இனிய நன்னாளில் நயப்புடன் வாழ்த்துகின்றோம்.

விழாக் குழுவினர்.
(39-19-21)

## தவறிவிட்டது

பன்னாலை, தெல்லிப்பழையை நிரந்தர முகவரியாகவும் முத்தட்டு மட ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை தற்போது வதிவிட முகவரியாகவும் கொண்ட சபாரத்தினம் கணேசன் என்பவரது தேசிய அடையாள அட்டை(691730492V), மருத்துவ சபை அடையாள அட்டை சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ATM அட்டை அடங்கிய பேர்ஸ் கிழக்கு கோண்டாவிலுக்கும் கொக்குவில் மேற்கு குளப்பிட்டிச் சந்திக்கும் இடையில் ஸ்ரேசன் வீதி, காங்கேசன்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் அல்லது 0777147017 தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 10 | 02 |
| * | * |
| 07 | 04 |
| * | * |
| 1924 | 2006 |



தம்பு சொலமன் அந்தோனிப்பிள்ளை

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறவில்லை உம் துயரம்
ஐந்து ஆண்டுகள் என்ன
ஐயாயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
ஐயா நாம் உம்மை மறவோம்.

58, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9361
(34) (2887)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## UNITY PC SYSTEMS

கொழும்பில் 10 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் UNITY PC SYSTEMS இப்போது யாழ் நகரில் அதன் கிளையை இல39/4A, 3rd Lane, Power House Road இல் திறந்துள்ளது.



இங்கே உங்களுக்குத் தேவையான i3 ,i5 Dualcore கணனிகள், Hp, Cannon, Printer மற்றும் Toner கள் Kingston, Creative, A4tech, Mediatech, Logitech Webcamera கள் Headphone கள் D-link TP-Link Dongles மற்றும் Single port , 4 port; wireless router களையும் mp3 mp4 Players களையும் உத்தரவாதத்துடனும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு
0773-446194, 021-2220666

## மரண அறிவித்தல்

### முருகையா பிரபாகரன்



தெல்லிப்பழை கிழக்கு "கீதஸ்தான்"ஐ பிறப்பிடமாகவும் துர்க்காபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா பிரபாகரன் (01.04.2011) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா முருகையா (மரக்கூட்டுத்தாபன முன்னாள் முகாமையாளர்) மற்றும் காந்திமதி முருகையா (இளைப்பாறிய ஆசிரியை, அதிபர்- சைவப்பிரகாச வித்தியாசாலை, தெல்லிப்பழை) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை - மற்றும் புஷ்பம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வேந்திராவின் அன்புக் கணவரும் திருமதி கீதாஞ்சலி - பாலசுப்பிரமணியம் (U.K), காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணியம் (U.K), செல்வலஷ்மிபிள்ளை, செல்லம்மா, அருமைநாயகம், செல்வமலர், செல்வராணி, செல்வநாயகம், (சாவகச்சேரி பிரதேச செயலகம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக தெல்லிப்பழை கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் கட்டை ஒழுங்கை,
துர்க்காபுரம், தெல்லிப்பழை.
(40-27)(சி/577332)
தகவல்:
திருமதி கா.முருகையா

## மகளிருக்கான விடுமுறைக்கால 12 நாள் வகுப்புகள்

- வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
- வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
- இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

**கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (HAIR DRESSING & STYLING)**

50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 வித முடி வெட்டுதல். **தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான** பயிற்சி, Perming தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

✿ **Facials**, கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் Waxing, எவ்வித சிரமமுமின்றி **தமக்குத்தாமே Facial** செய்வதற்கான பயிற்சி.

இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✿ தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 09-04-2011 சனி காலை 10.00 மணி**

**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

☞ மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

## அபராதம் விதிப்பு

வல்வெட்டித்துறை வீதி போக்குவரத்துப் பொலிஸார் நடத்திய வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையின்போது உரிய ஆவணங்கள் இன்றியும் மதுபோதையிலும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் வல்வெட்டித்துறை போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி சம்பந்தப்பட்டவருக்கு 17ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். (ம-319)